Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 03 வெள்ளிக்கிழமை (17.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 229

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2486)


முன்னேற்றம்
08


நானும் ஒரு விவசாயி
10



பரிசோதனை உண்டு
14


பூரண சுகம்
17


பல்லினாலும் முடியும்!
18

# சொல்ஹெய்ம் மீது வழக்கு; முளைகொள்கிறது முறுகல்



(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவராக பணியாற்றிய எரிக்சொல்ஹெய்ம் உட்பட முக்கிய இராஜதந்திரிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தில் கடமையாற்றிய முக்கிய இராஜதந்திரிகளுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்த மாவட்ட மேலதிக நீதவான் அமலீ ரணவீர, குறித்த இராஜதந்திரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரமுடியும் என அறிவித்துள்ளார். இலங்கைக்கான முன்னாள் நோர்வே தூதுவர் ஹில்டே ஹராஸ்டல்ட் உள்ளிட்ட சிலருக்கு எதிராகவே நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று நம்பிக்கை மோசடி தொடர்பில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றை நடாத்துவதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதாக உறுதியளித்து, பின்னர் பணம் வழங்கப்படவில்லை என

19 ஆம் பக்கம் பார்க்க


## வடக்கில் நியாயமான தேர்தல் வேண்டும் சொல்ஹெய்மிடம் கோருகிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக கூட்டமைப்பு நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்து உரையாடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கில் தேர்தல் நியாயமான முறையில் நடாத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று சொல்ஹெய்மிடம் கேட்டுக்கொண்டதாகவும் தெரிகிறது. இதுகுறித்து சொல்ஹெய்ம் ருவிட்டர் தளத்தில் தகவல் பதிவுசெய்திருக்கிறார் என்றும் இச்சந்திப்பு எங்கே? எப்போது இடம்பெற்றது என்ற தகவல் எதுவும் குறிப்பிடவில்லை.

## புதுமெருகுடன் யாழ். மணிக்கூட்டுக் கோபுரம்



யாழ். மாநகர சபையினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க யாழ். மணிகூட்டுக் கோபுரம் நேற்று மாலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்:டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திறந்து வைத்ததுடன் அதை அழகுப டுத்த உருவாக்கப்பட்ட நீர் சுழற்சித் தடாகத்தையும் ஆரம்பித்து வைத்தனர். இந்நிகழ்வில் யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்புக்கு எதிராக மேலும் 500 வழக்குகள்
### சட்டத்தரணிகள் சங்கம் களத்தில்

வடக்கில் வாழும் தமிழ் மக்களின் தனியார் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்புச் செய்வதற்கு எதிராக மேலும் 500 வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சங்கத்தின் தலைவி சாந்தா அபிமன்னசிங்கத்தின் தலைமையில், மேலும் 7 சட்டத்தரணிகள் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்ய உள்ளனர். வழக்குகளைத் தாக்கல் செய்தற்கான ஆவணங்கள் தற்போது தயார் செய்யப்பட்டு வருவதாகவும் இதனடிப்படையில் விரைவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் எனவும் சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளார். இழப்பீடுகள், நிவாரணங்கள் வேண்டாம் காணிகள் வழங்கினால் போதும் என்ற அடிப்படையில் வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் வாழும் தமிழ் மக்களின் காணிகளை அரசாங்கம் ஆக்கிரமிப்பதற்கு எதிராக தமிழ்த

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் துரிதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவடடச் செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் இது தொடர்பில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தக் குடியேற்றத்திற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
தரம் – 5
புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாள்


## மீண்டும் பவானி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக திருமதி பவானி பசுபதிராஜா யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மீண்டும் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற மின்பிறப்பாக்கி மற்றும் இரும்புக் கேடர்கள் வைத்தியசாலைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் நடைபெற்ற விசாரணைகளை அடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க



தேசிய அபிவிருத்தி வங்கியின் 71 ஆவது கிளை நெல்லியடியில் திறந்துவைக்கப்பட்டது. இக்கிளையைத் திறந்து வைக்க வருகைதந்த தேசிய அபிவிருத்தி வங்கியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ரசல் டீ மெல்லும் விருந்தினர்களும் நெல்லியடி நகர் வீதியூடாக அழைத்துவரப்படுவதையும், தேசிய அபிவிருத்தி வங்கியின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் இந்திரஜித் விக்கிரமசிங்க மங்கல விளக்கேற்றுவதையும், நெல்லியடி முகாமையாளர் ஜீ.பீலிக்ஸ் ரதீஸ் தலைமையுரை ஆற்றுவதையும், கல்வியில் சாதனை நிகழ்த்திய மாணவி கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (01)

# கவனிப்பாரற்றுக் காணப்படும் கைத்தொழில் பயிற்சி நிலையம்

வட மாகாண தொழில் துறை திணைக்களத்தினால் வவுனியாவில் நடத்தப்பட்டு வந்த கைத்தொழில் தொழிற்பயிற்சி நிலையம் கவனிப்பாரற்று காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்திற்கென அமைக்கப்பட்ட இப் பயிற்சி நிலையம் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக பயிற்சிகள் ஏதும் இடம்பெறாது பயிற்சி நிலைய கட்டடம் இருக்கும் பகுதி பற்றைகளால் சூழ்ந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இக்கட்டடம் அமைந்துள்ள பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் கயிறு திரித்தல், கைவினை பயிற்சிகள் இடம்பெற்று வந்த நிலையில் எவ்வித காரணமும் இன்றி இப் பயிற்சி நிலையம் மூடப்பட்டதாகவும் அதன் பின்னர் இந் நிலையத்தில் எவ்வித பயிற்சியும் இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பல இளைஞர், யுவதிகள் தொழிற்பயிற்சியை பெற முடியாதுள்ள நிலையில் இப்பயிற்சி நிலையமானது மூடப்பட்டுள்ளமையானது கவலையளிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இப்பகுதி கிராம அபிவிருத்தி சங்கத்தினர் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அறிவித்துள்ள போதிலும் எவ்வித பலனுமின்றி காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே இப்பயிற்சி நிலையத்தினை செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட வட மாகாண தொழிற்துறை திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இல்லையேல் அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்கத்திடம் இப்பயிற்சி நிலையத்தினை கையளிக்குமாறும் இப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட கைத்தொழில் துறை அதிகாரி தெரிவிக்கையில்,

மேற்படி பயிற்சி நிலையத்தில் நீர் வசதியின்மையால் மூடப்பட்டுள்ளதாகவும் எனினும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்மையினால் மிக விரைவில் அதனைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.(160)

# முல்லைத்தீவில் இன்று விசேட வைத்திய முகாம்

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் இன்று விசேட இலவச வைத்திய முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இவ் விசேட வைத்திய முகாமானது 'சுப உதான' திட்டத்தின் கீழ் கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட வைத்தியர் குழுவினரால் நடத்தப்படவுள்ளது.

காலை 8.00 மணிமுதல் நடைபெறவுள்ள இவ் வைத்திய முகாமில் சகலவிதமான நோய்களுக்கும் சிகிச்சைகளும் ஆலோசனைகளும் விசேட வைத்தியர்களால் வழங்கப்படவுள்ளன.

இவ்வைத்திய முகாமானது முல்லைத்தீவு படைத் தலைமையகத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இதில் அனைவரையும் வந்து பயனடையுமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (125)

# கைமாறி எடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற பொதுசன நூலகத்தில் கைப்பையொன்று நேற்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் வாசகர் ஒருவரினால் தவறுதலாக கைமாறி எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக யாழ். பொதுசன நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி குறிப்பிட்ட கைப்பை தனது தேவையின் நிமித்தம் பொதுசன நூலகத்திற்கு வருகைதந்த வைத்தியர் ஒருவருடையது என்றும் தெரிவித்த அவர் தனது கவனத்துக்கு தெரியப்படுத்தியதாகவும் அந்தக் கைப்பைக்குள் ரெலஸ்கோப், ஏ.ரி.எம். காட் மற்றும் முக்கியமான ஆவணங்கள் அடங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுநூலகத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து வாசகர்களின் உடைமைகள் அனைத்தும் காவலாளியிடம் ஒப்படைக்கப்பட்டு அவற்றுக்கு ரோக்கன் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு நடைமுறை இருக்கையில் எவ்வாறு குறிப்பிட்ட வைத்தியரின் கைப்பை மாறிச் சென்றிருக்கின்றது என்பது நூலக ஊழியர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே குறிப்பிட்ட கைப்பையை தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் அதனை பெருந்தன்மையுடன் தன்னிடம் ஒப்படைத்து உதவுமாறு பிரதம நூலகர் கேட்டுள்ளார்.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. (நெல் அவிக்கும் ரங்க்)

தொடர்பு: 0773806132 (R/1317)


# விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்

ஏ-9 வீதியில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் மரணமானார்.

நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையாகிய வைத்திலிங்கம் மகேஸ் வரன் (வயது - 67) என்ற வயோதிபரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி மரணமாகியுள்ளார்.

நேற்று முற்பகல் குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருக்கையில் இவர் கன்ரர் வாகனம் ஒன்றுடன் மோதியதினால் இந்த விபத்து சம்பவித்ததாகத் தெரியவருகின்றது.

இவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முற்பகல் 11.15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், எனினும் அவர் சிகிச்சை பயனின்றி பிற்பகல் 3.30 மணிக்கு மரணமடைந்ததாகவும் மேலும் தெரிய வருகின்றது. இந்தச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(பா)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2427 திகதி 15-05-2013

ஆங்கில எழுத்து: F

வெற்றி எண்கள்: 05 33 34 56

போனஸ் இல: 06

ஜக்பொட் பரிசு ரூ. 33,350,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 246604 | 20/- | 4,932,080/- |
| 2 இல | 17643 | 100/- | 1,764,300/- |
| 3 இல | 377 | 1,000/- | 377,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9824 | 40/- | 392,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 660 | 1,000/- | 660,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 33,350,350/- | - |
| 1 இல + போனஸ் இல | 11763 | 100/- | 1,176,300/- |
| 2 இல + போனஸ் இல | 578 | 500/- | 289,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 479 | 200/- | 95,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 287972 | | 12,575,940/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 மே 18 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 34,023,125/-

வளமான வாழ்வித்து

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

C/2751


# நாளை மின்சார விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகானந்தநகர் கிராமத்திற்கு நாளைய தினம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இக்கிராமத்திற்கான மின்விநியோகம் இடம்பெறவுள்ளது.

பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ள மன்சாரம் வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (29)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

## கேள்விப்பத்திரம் கோரல்

### அச்சகத்திற்கான கட்டடம் அமைத்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை இல 12, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள காணியில் 40 அடிx 40அடி விஸ்தீரணத்தில் அச்சகத்திற்கு கட்டடம் அமைப்பதற்காக கேள்வி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான சகல விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 100/= செலுத்தி சபையின் அலுவலக நேரங்களில் பெற்று 30/05/2013 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
இல 12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2324 (C/2752)

செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை



சர்வதேச லயன்ஸ் கழக 306 B 1 இன் 8 ஆவது மாநாடு வத்தளை பிகாசஸ் றீப் ஹொட்டலில் மே 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெற்றபோது 2012/2013 ஆம் ஆண்டின் வலயத் தலைவருக்கான சாதனை விருதினை (ACHIEVEMENT AWARD) தேசமானி லயன் S.J.செல்வராஜா MJF,JP அவர்களுக்கு வழங்கப்படுவதை காணலாம்.

# கல்வி போதித்த ஆசிரியர்களை மாணவர்கள் கௌரவிக்கவேண்டும்

## - கணித விரிவுரையாளர் கே.ரதீசன்

(வடமராட்சி)

சமயப்பற்று ஒழுக்கத்தோடு கல்வியில் முன்னணியில் திகழும மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவர். அவர்களது வாழ்க்கையில் ஒளிவீசும். மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் அதிக கவனமெடுக்க வேண்டும்.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை மாணவர்கள் மறந்துவிடக் கூடாது என கணித விரிவுரையாளர் கே.ரதீசன் தெரிவித்தார்.

வடமராட்சி அல்வாய் சதா பொன்ஸ் கல்வி நிலையத்தில் கல்வி கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சாதனை நிகழ்த்திய மாணவர்கள் தமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவித்து நடாத்திய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெரியோர்களை மதிக்கத் தவறும் இன்றைய இளைய சமுதாயத்திலே கல்வி கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவித்து மாணவர்கள் விழா நடாத்துவது பாராட்டுக்குரியதாகும்.

சதா பொன்ஸ் கல்வி நிலையம் இவ்வருடம் 50 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. இப்பிரதேச மாணவர்களுக்கு இக்கல்வி நிலையம் அரிய சேவைகளைச் சிறப்பாக வழங்கி வருகிறது. இக்கல்வி நிலையத்தின் மாணவர்கள் கணிதத்திலும், ஆங்கிலத்திலும் உன்னத சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை மிக மகிழ்ச்சிக்குரியதாகும்.

மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் அதிக கவனமெடுத்து அவர்களைக் கண்காணித்துக் கொள்ளவேண்டும். அதற்காக வீண் செலவுகளை செய்யக்கூடாது.

கிராமப் பகுதிகளில் சிறந்த கல்வி நிலையங்கள் இயங்கி வரும்போது சில பெற்றோர்கள் பணத்தை வீணே செலவு செய்து பிள்ளைகளைத் தூர இடங்களில் உள்ள கல்வி நிலையங்களுக்கு அனுப்புகின்றனர்.

ஆனால் கிராமப்புற கல்வி நிலையங்களில் கற்கும் மாணவர்கள் அவர்களை விட சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். என்றார். (01)

# கருத்தரங்கு

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணிதபாட கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் அமைந்துள்ள கணித மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகல கணிதபாட ஆசிரியர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கோட்கப்பட்டுள்ளது. (109)

# இளைஞர் நாடாளுமன்றத்திற்கு புதுக்குடியிருப்பிலிருந்து ஒருவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை இளைஞர் நடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

இதற்கு இலங்கையிலுள்ள 316 பிரதேச செயலகங்களிலிருந்தும் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் குறைந்தது மூன்றுக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திலிருந்து ஜெயம் ஜெகன், மு.வருணஜீவ், சி.சிவயோகன் ஆகியோர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். இதில் ஜெயம் ஜெகன் மற்றைய இருவருக்கும் விழுந்த வாக்குகளிலிருந்து 155 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

இத்தேர்தல் வாக்களிப்பு காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை இடம்பெற்றது. இளைஞர் நாடாளுமன்றத்தின் முக்கிய நோக்கங்களாக கல்வி, கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் இளைஞர் சமுதாயத்தை வளர்த்தலாகும்.

# சீரற்ற மின் விநியோகம்; நாளாந்த நடவடிக்கை பாதிப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தைவீதிப் பகுதியில் மின்சார விநியோகம் சீரற்றதாக, அழுத்தம் குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதால் இப்பிரதேச மக்கள் தாம் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் காளி கோவில், மரக்காலை மற்றும் பல வீடுகள் அமைந்துள்ள நிலையில் அழுத்தம் குறைந்த மின்சாரம் கிடைப்பதால் மின்சாரப்பொருட்களைப் பயன்படுத்த முடியாது அடிக்கடி பழுதடைவதாக தெரிவிக்கும் மக்கள் அவ்விடத்தில் மின்சார கம்பிகள பதிந்து காணப்படுவதால் திருட்டு மின்சாரம் பெறும் நடவடிக்கையும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இப்பிரதேசத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் அதிகம் இருப்பதாகவும். சீரற்ற மின்விநியோகத்தால் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட எமக்கு தற்போது கம்பியினூடாகவே மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனாலேயே இவ்வாறான சிரமங்கள் ஏற்படுவதாகவும், இப்பகுதிக்குரிய மின்இணைப்பை கறுப்பு வயருக்கு மாற்றி அதனூடாக மின் இணைப்பை வழங்கினால் தாம் சீரான மின்சாரத்தைப் பெறக்கூடியதாக இருக்கும் எனத்தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# யாழ்.பல்கலை மாணவர்களின் காண்பியக் கலைக் கண்காட்சி



(கிரு-சிகரம்)

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட கலைத்துறை மாணவர்களின் காண்பியக் கலைக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத்தில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு மூத்த ஓவியர் ,ம.கனகசபையால் நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரும், பேராசிரியருமான வசந்தி அரசரத்தினம் கலந்து கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒவ்வொருவரதும் இரண்டு தொடக்கம் மூன்று ஆக்கங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இங்கு 23 மாணவர்களால் வரையப்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அது மட்டுமல்லாது இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆக்கங்களில் மட்டக்களப்பு பிரதேசத்தில் கல்விகற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான அன்பரசன் யுத்தகாலத்தில் தன்னுடைய பாடசாலையில் வெடிகொழுத்தி சரஸ்வதி பூசை கொண்டாடும் போது பாடசாலைக்கு அருகாமையில் நடைபெற்ற வெடிவிபத்தின் போது எவ்வாறு தனக்கு பக்கத்தால் வெடித்த வெடிகுண்டின் பாகங்கள் போனது என்பதைக் காட்டும் ஓவியத்தை காட்சிப்படுத்தியிருந்தார்.

அது மட்டுமல்லாது தர்சிகாவினுடைய, காதலர்கள் இருவரது வெளிமனம் எப்படி இருக்கும், உள்மனம் எப்படி இருக்கும் என்பதனைக் காட்டும் ஓவியமும், அபிராமி குடித்துக் கொண்டு இருந்த கோப்பியை பேப்பர் ஒன்றில் ஊற்றி விட்டு அதற்கு உருவம் கொடுத்த காட்சியும், பாத்திமா பர்ஸானாவின் பெருநாள் 'காட்சி என 23 மாணவர்களது எண்ணங்களில் தோன்றியவற்றுக்கு உயிர் கொடுத்து கண்கவர் ஓவியங்களாகத் தீட்டி காட்சிப்படுத்தப் பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தக் கண்காட்சி தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடை பெறவுள்ளது.

# தம்பாலை - சந்நிதி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

தம்பாலைச் சந்தியில் இருந்து நேரே செல்லும் சந்நிதி வீதியானது பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக அந்த வீதியால் பயண்ம் செல்வோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் செல்லும் பிரதான போக்குவரத்து வீதியாக இது காணப்படுவதால் கனரக வாகனங்களும், பாரவூர்திகளும், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளும் வேறு பல வாகனங்களும் இந்த குறிப்பிட்ட தூர வீதியால் பயணிக்கவேண்டிய அவலநிலை இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இந்த குறிப்பிட்ட தூர வீதியைப் புனரமைத்துத் தருமாறு பயணிகளும், சாரதிகளும் கோரிக்கையினை விடுக்கின்றனர். (85)

# பாசையூர் இறங்குதுறைக்கு மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர் இறங்குதுறை கரையோர பிரதேசத்திற்கு மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களுக்கு மின்சார விநியோகத்தை வழங்கும் வகையில் முன்னர் 22 மின்கம்பங்கள் நடப்பட்ட நிலையில் மின் இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மின்சார வசதிகள் இன்றி இப்பிரதேச மக்கள் பல்வேறு நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கிவந்த நிலையில் அமைச்சர் டக்களஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக இம்மக்களுக்கு மின்சாரவிநியோகம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபையின் முன்னாள் உதவி மேயர் றீகன் தெரிவித்தார்.

எனினும் இப்பிரதேச மக்கள் மின்சார விநியோகம் வழங்கபட்டதால் மகிழ்ச்சியாக ,இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மேலும் மேலும் நம்மைப் புதைத்தபடி...

கற்பனையிலும் கனவு விருப்பங்களிலும் திளைத்தபடி நடந்து, நடப்பு நிலையைக் கவனிக்காது அவலங்களில் வீழ்ந்து சிரமப்படுபவர்களைக் குறிக்கும் ஒரு கவிதை வரி உண்டு. "கண்கள் நட்சத்திரங்களோடு உறவாடினாலும் கால்கள் என்னவோ பூமிச்சேற்றில்தான் புதையுண்டிருக்கின்றன" என்பது அது.

இலட்சியங்கள் கனவுகள் விருப்பங்கள் எல்லாம் இருக்கவேண்டியதுதான், ஆனால் யதார்த்தமுணர்ந்து நடத்தல் என்பதுதான் லௌகீக வாழ்வுக்கு முக்கியமானது. ஒருவர் நடைமுறைவாதியாக இல்லாவிட்டால் அவரால் இந்த வாழ்வுச் சிரமங்களை விலக்கிக் கொள்வதும் கடினமாகிவிடும். அதிலும் மக்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் நடைமுறை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமலோ அல்லது புறக்கணித்தோ நடந்துகொள்வார்களாயின் அந்த சமூகத்தையே புதைசேற்றில் அழுத்துகிறவர்களாகத்தான் இருப்பார்கள்.

இலட்சிய விருப்பத்திற்கும் நடைமுறைத் தேவைக்குமிடையே நேரும் சங்கடத்தைப் பற்றி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீனநாட்டின் மகா குருவான கன்.:.பூஷியஸ் ஓர் உதாரணம் சொல்கிறார். "என் மகன் ஒரு கொலை செய்துவிடுகிறான். என்னிடம் வந்து, 'அதிகாரிகளிடம் சொல்லிவிடாதே' என்கிறான். நான் சொல்வதா வேண்டாமா" என்பது அவருக்கு மிக சங்கடத்துக்குரிய விஷயமாக இருக்கிறது.

பொய்யாமொழிப் புலவர் எனப்படுகிற திருவள்ளுவருக்கு அந்தச் சங்கடமோ சந்தேகமோ இல்லை. உண்மை சொல்லுவது அந்த சந்தர்ப்பத்தில் மகனுக்குத் தீங்கிழைக்கும் என்றால் உண்மை சொல்வது தவறு என்பார் அவர். மனிதனுக்கு கெடுதி செய்வது எதுவும் உண்மையாக இருக்க முடியாது என்பது அவர் வாதம்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந் தீமையிலாத சொலல்" என்றும், "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்று இந்த சங்கடத்தை அவர் தாண்டிப் போய்விடுகிறார்.

ஒருவருக்கு நன்மை பயக்குமென்றால் பொய்யும் சொல்லலாம் என்றிருக்கும்போது, ஒரு சமூகத்தையே அவலங்களிலிருந்து மீட்கும் நன்மைச் செயலுக்காக எங்களது வீம்புகள், ரோசங்கள், பழியுணர்ச்சிகளைக் கைவிடுதல்தான் இன்றைய யதார்த்தமுணர்தல் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களிலிருந்து தொடர்ந்துவரும் நம் சமூகத்தின் சிந்தனைமுறையும் நினைப்புகளும் நடப்புகளும் எப்படி உள்ளன என்பது பற்றிய ஒரு கறாரான விமர்சனப் பார்வையை இந்தச் சமயத்திலேனும் நாம் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பொய்மை ஆவேசங்களில் கட்டியிழுத்துச் செல்பவர்களை நம்பியே நாம் மீண்டும் மீண்டும் அதே பழைய வகைமைகளில் சிக்கிச் சீரழிய நேரிடும்.

மக்களைக் காக்க, வாழவைக்க — எவ்வளவு சிரமமாயிருந்தாலும் — மற்றைய சமூகத்தினரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் இணக்க வழிமுறையை யோசிக்க, அதற்கான சிரமங்களை கடின உழைப்பை மேற்கொள்ள சோம்பல்படுகிறவர்கள்தான் வெறுமனே எதிரிகளைத் தூற்றிக்கொண்டே நம் கஷ்டங்களுக்கெல்லாம் பிறரை மட்டுமே காரணமாக்கி இங்கு மக்களிடையே எதிர்ப்பான மன நிலையை நிரந்தரமாக்கி வைத்திருக்க முயல்கிறார்கள்.

யுத்தமற்ற, மரண ஓலங்களற்ற இந்தச் சூழலை எப்படி மேலெடுத்துச் செல்வது என்பது பற்றி இவர்கள் யோசிப்பதில்லை. அதற்குச் செய்யவேண்டிய பிரய்த்தனங்களில் இறங்கப் பஞ்சிப்பட்டு அதிருப்தியையும் அவநம்பிக்கைகளையுமே பேசியபடி இருக்கிறார்கள். யார் மீதுதான் பிழைகள் கண்டுபிடித்துக்கொண்டிருக்க முடியாது?

அவலங்கள் நீங்கி நம் மக்கள் வாழ்வதற்கு நாம் உடன்செய்ய வேண்டுவது, அரசுடனும் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த மக்களுடனும் தலைமைகளுடனும் நேர்மறை அணுகுமுறையுடன் பேச முன்கையெடுப்பதைத்தான். அதைவிடுத்து விருப்பத்துக்குரிய வீர வசனங்களைக் கேட்டுப் புளகாங்கிதப்பட்டுக் கொண்டிருந்தால் மேலும் மேலும் சேற்றில் புதைந்துகொண்டிருப்பதாகவே இருக்கும்.

- ஆசிரியர்

# வடமாகாண குறும்படப்போட்டி வவுனியா கலைஞர்கள் ஆட்சேபம்

(வவுனியா)

வடமாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண குறும்படப் போட்டி தொடர்பில் வவுனியா மாவட்ட கலைஞர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கலைஞர்கள் குழுவொன்று நேற்றுமுன்தினம் வவுனியா வைரவபுளியங்குளத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் வடமாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட குறும்படப் போட்டி தொடர்பில் அனைத்து குறும்படத் தயாரிப்பாளர்களுக்கும் போதுமான கால அவகாசத்தில் அறிவித்தல்கள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அதிகளவான குறும்படங்கள் வெளியிடப்படும் வவுனியா மாவட்டத்தில் இருந்து போதுமான குறும்படங்களைப் போட்டிக்கு அனுப்ப முடியாது போயுள்ளது.

அத்துடன் ஒரே நாளில் 17 குறும்படம் என்ற விதத்தில் 34 குறும்படங்கள் இரு நாட்களில் காட்சிப்படுத்தப்பட்டு போட்டி இடம்பெற்றுள்ளது. இதன்போது நடுவர்களாக முதன் நாளில் கலந்து கொண்டிருந்தவர்கள் சிலர் இரண்டாம் நாளில் கலந்துகொள்ளவில்லை. இது நடுவர்கள் இப் போட்டியில் அக்கறை காட்டாத தன்மையை வெளிப்படுத்துகின்றது. எனவே நாம் எமது விசனத்தை தெரிவித்துக் கொள்ளவேண்டியுள்ளது.

அத்துடன் குறும்படப் போட்டிக்கு நடுவர்களாக கலந்து கொண்டவர்கள் தொடர்பில் நாம் ஆட்சேபம் தெரிவிக்கின்றோம். நடுவர்கள் குறும்படத்துடன் தொடர்பில்லாதவர்களாக காணப்பட்டனர் என்பது தொடர்பில் நாம் போட்டி இடம்பெறும் போதே ஏற்பாட்டாளர்களுக்கு தெரிவித்திருந்தோம். எனினும் அதற்கான மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் போட்டி முடிவுகள் சிறந்த முறையில் இடம்பெறவில்லை.

இவ்வாறான நிலை எதிர் காலத்தில் குறும்படத்துறையில் இருந்து எம்மை வெளியேற்றுவதாக கூட இருக்கலாம். ஏனெனில் இப் போட்டி விதிமுறையின் பிரகாரம் இடம்பெறவில்லை. அத்துடன் எமது தொழில்நுட்ப ஆற்றல்கள் உட்பட குறும்படத்தின் தன்மை வெளிப்படும் வகையில் நடுவர்களுக்கு காண்பிக்கப்படவுமில்லை. அத்துடன் போட்டிக்கு அனுப்பப்படும் குறும்படங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் எடுக்கப்பட்டதாக இருக்க வேணடும் என கோரப்பட்டிருந்தபோதிலும் நீண்ட காலங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படங்களும் போட்டிக்காக அனுப்பப்பட்டிருந்தது.

அத்துடன் முன்னர் இடம் பெற்ற இதே போன்ற போட்டியொன்றில் பரிசு பெற்ற குறும்படமும் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அக்குறும்படத்திற்கு சான்றிதழ் வழங்கியவர்களும் தற்போதைய போட்டியிலும் நடுவர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இப் போட்டி தொடர்பில் நாம் எமது ஆட்சேபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தனர். (160)

# பாணின் நிறைகுறைந்தால் கடும் சட்ட நடவடிக்கை

பாணின் நிறை குறைவாக விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று யாழ். மாவட்ட செயலக நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடல் திணைக்கள அதிகாரி வி.கிருஸ்ணதாஸ் தெரிவித்தார்.

பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி நிலையங்களில் பாணின் நிறை குறைவாக உற்பத்தி செய்வது நிறுத்தல் அளவை கருவியால் முத்திரையிடும் போது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், பாண் விற்பனை செய்யும் கடைகள் மற்றும் நடமாடும் சேவை வண்டிகளில் பரிசோதனை மேற்கொள்ளும் போது, பாணின் நிறை குறைவாக விற்பனை செய்வது உறுதிப்படுத்தப்பட்டால், விற்பனையாளர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், விற்பனையாளர்கள் பாணின் நிறை 450 கிராம் உள்ளதா என பரிசீலணை செய்து விற்பனை செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், 799 விற்பனை நிலையங்களில் நிறுத்தல் அளவைகள் கருவிகள் பரிசீலிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மார்ச் மாதத்தில் சாவகச்சேரி, கொடிகாமம், யாழ்ப்பாணம் பிரதேசங்களில் 537 விற்பனை நிலையங்களும், ஏப்ரல் மாதத்தில் அனலைதீவு, காரைநகர், ஊர்காவற்துறை பிரதேசங்களில் 262 நிலையங்களும் பரிசீலிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டன. அதில் 28 விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் கூறினார். (25)

# காலாவதியான பொருட்களை விற்பனை செய்ததால் தண்டம்

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 27 வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார். மல்லாகம் மற்றும் ஊர்காவற்துறை நீதிமன்றங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த வாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், மல்லாகத்தில் 21 வர்த்தகர்கள் மற்றும் ஊர்காவற்துறையில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக மல்லாகம் மற்றும் ஊர்காவற்துறை நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வர்த்தகர்கள் நேற்று நீதிமன்றங்களில் ஆஜர்ப்படுத்தப்பட்டவேளை, ஊர்காவற்துறைப் பகுதியில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் மல்லாகம் பகுதியில் 16 வர்த்தகர்களுக்கு எதிராக 47ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது.

அத்துடன், மல்லாகம் நீதிமன்றில் வழக்கிற்கு சமுகமளிக்காத 5 வர்த்தகர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அதிகாரி மேலும் கூறினார்.

# செய்மதி உபகரணங்களை கைப்பற்றிய சுங்கப்பிரிவினர்

## 2 இந்தியப் பிரஜைகளும் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட தொலைக்காட்சிக்கான 103 செய்மதி உபகரணங்களை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

சென்னையில் இருந்து வருகைதந்த இரண்டு இந்திய பிரஜைகளையும் இதன்போது கைதுசெய்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

இந்த சந்தேகநபர்கள் ஒருதொகை பெரிய வெங்காய விதைகளையும் தங்களது பயணப் பொதிகளில் மறைத்து சட்ட விரோதமான முறையில் கொண்டுவந்துள்ளனர்.

பெரிய வெங்காய விதைகளுடன், தொலைக்காட்சிக்கான செய்மதி உபகரணங்களையும் மறைத்துக் கொண்டுவந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் இந்திய பிரஜைகள் இருவரும் விடுவிக்கப்பட்டதுடன், 800,000 ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய இந்த உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

# இளைய தலைமுறையினரின் கவனச் சிதறல்கள்

லக்ஷ்மண பெருமாள்

**தொலைக்காட்சியின் வருகைக்குப் பின்னர் ஒரே குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அந்நியப்பட்டுள்ளனர். குடும்பத்துக்குள் கூடிப் பேசுதல் என்பது பெருமளவு குறைந்துள்ளது. குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக்கூட காணாது தொலைக்காட்சி பார்ப்பதில் மூழ்கிக் கிடக்கிறார்கள். விடுமுறை நாட்களில் விருந்தினரை சென்று பார்ப்பதிலும், வீட்டிற்கு வருகிற விருந்தினர்களை உபசரிப்பதிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.**

இன்றைய தலைமுறை நுகர்வுக் கலாசாரத்தாலும் கவனச் சிதறல்களாலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்னென்ன? அவர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருப்பதென்ன?

ஏழையான சமூகத்தில், அவர்களுடைய தேவை எளிமையானது, வெளிப்படையானது, நேர்மையானது. அவை உணவு, உடை, உறைவிடம், நன்னீர், ஆரோக்கிய உடல்நலம் ஆகியவைதான். உள்ளூரில் தயாரிக்கும் / கிடைக்கும் பொருட்களைக் கொண்டே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். அவற்றைக் கொண்டே தங்கள் வாழ்வியலை நகர்த்துகிறார்கள். நடுத்தரக் குடும்பங்களிலும், செல்வ வளமிக்க குடும்பங்களிலும்தான் "தேவைகளைத்" தாண்டி "விருப்பம்" பிரதானமாகியுள்ளது. நீண்ட நாள் ஆசைகள், திடீர் ஆசைகள், குழப்ப மனநிலை, மயக்க நிலை, அந்தஸ்து என பொருட்களை வாங்கிக் குவிக்கும் நுகர்வோர் மனநிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நடுத்தரக் குடும்பங்களில்தான் பெரும்பாலும் பொருட்களை வாங்கிக் குவிப்பதா அல்லது சேமிப்பதா என்று முடிவெடுக்கத் தெரியாமல் தவிக்கிறார்கள். நுகர்வோர் மனநிலைக்கு அடிமையாகிற சமூகத்தில் அவர்களை எது மகிழ்விக்கும் என அறியாமல் குழப்பத்தில் உள்ளனர்.

பொருட்களை வாங்கிக் குவிப்பதின் பின்னணியில் தங்களின் "மகிழ்ச்சி" அடங்கியுள்ளது என்பதைக் காட்டிலும் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் முன்பு தாங்கள் "வளமிக்கவர்கள்" என்று காட்டுகிற மனப்பாங்கே உள்ளது. அதில்தான் அந்தஸ்து அடங்கியுள்ளது என நினைக்கிறார்கள். எதிர் பாலியலை கவர்வதற்கும் மயக்குவதற்குமாக பொருட்களை வாங்கிக் குவிக்கிறார்கள். இதைத்தான் "பகட்டான நுகர்வு" என வர்ணிக்கிறார் அமெரிக்காவின் பொருளாதார வல்லுனரும், சமூகவியலாளருமான Thorstein Veblen. மகிழ்ச்சி எனச் சொல்லி பொருட்களை வாங்கிக் குவித்தாலும் பெரும்பாலும் அவர்கள் வாங்கிக் குவிக்கிற பொருட்கள் பயனற்று இருப்பதைக் காண இயலும்.

தீர்மானிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் தங்களின் தேவைகளைக் கருதி குறிப்பிட்ட சில பொருட்களை வைத்துக் கொள்வதே சமூக நுகர்வு (Social Consumption) ஆகும். உதாரணமாக ஒருவர் மோட்டார் சைக்கிள் வைத்துக் கொள்ளுதல், மொபைல் போன் வைத்துக் கொள்ளுதல், வீடு வாங்கிக் கொள்ளுதல், தரமான பள்ளிகளில் குழந்தைகளைப் படிக்கச் செய்தல் ஆகியவைதான் சமூக நுகர்வுக்கான காரணிகள்.

சுற்றத்தினருக்கு இணையாக வாழ வேண்டும். தங்களின் சுற்றத்தார் படிக்க வைக்கிற பாடசாலைகளிலேயே தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். இதை நிறைவேற்ற விடுமுறை நாட்களில் கூட பணிபுரிகிறார்கள். ஓய்வுபெறும் நாள் வரை ஓயாது ஓடுகிறார்கள். ஒருவர் ஓடுவதைப் பார்த்து அடுத்தவர் ஓடுகிற சமூகமாகத்தான் நுகர்வு மனநிலை இவர்களை மாற்றியுள்ளது.

உதாரணமாக, ஐரோப்பிய அரசுகள் தன்னல வயப்படுதலில் (Self Exploitation) ஒருவர் சிக்காமலிருக்க வருடத்தில் குறைந்தபட்சம் நான்கு வாரங்களுக்கு கட்டாய விடுப்பு அளிக்கிறது. ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் இவர்களின் நுகர்வு மனோநிலையால் பந்தயக் குதிரைகளாக உள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தை பத்திரிகைகளின் காலம் என அழைக்கலாம். அதன் பின்னர் ஏற்பட்ட காலத்தை வானொலி மற்றும் சினிமாக்களின் காலமாகச் சொல்லலாம். இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில்தான் தொலைக்காட்சி ஆக்கிரமிக்க ஆரம்பித்தது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தையும், தற்போதைய காலத்தையும் கணனி, multi media மற்றும் டிஜிட்டல் காலம் என வர்ணிக்கலாம்.

இன்று ஏதேனும் ஒரு திரைக்கு முன்னால் பலமணி நேரம் இளைஞர்களும் குழந்தைகளும் அமர்ந்திருக்கிறார்கள்.

தொலைக்காட்சிகளின் வருகைக்குப் பின்னரே பெரும்பாலும் விளம்பரங்கள் மக்களை ஆக்கிரமிப்பு செய்தன. சில பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் தரமானவை என உறுதி செய்தன. ஆகையால் பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்கள் மீதான மோகம் வளர்ந்தது. தரத்தின் அடிப்படையில் விலை குறித்த கவலையின்றி பொருட்களை வாங்கினார்கள். இவர்களைத் தான் பன்னாட்டு நிறுவனங்கள், விளம்பர நிறுவனங்கள், அதன் அதிகாரிகள் குறி வைத்தார்கள். இதற்கு அவர்கள் தொலைக்காட்சி மற்றும் பிரபல இணையத்தளங்களான Google, Facebook போன்றவற்றை பயன்படுத்திக் கொண்டார்கள்.

தொலைக்காட்சிகளில் பெரும்பாலும் குழந்தைகளுக்கான உணவு வகைகள், குளிர் பானங்கள், சொக்லேற், மொபைல் போன், அழகு சாதனங்கள் பற்றிய விளம்பரங்களே அதிகமாக இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குழந்தைகளையும் இளைஞர்களையும் கவர்வதற்காக விளம்பரங்களை அழகிகளைக் கொண்டும் நடிக நடிகையர் மற்றும் விளையாட்டு வீரர்களை வைத்தும் வருமானம் ஈட்டுகின்றன உற்பத்தி நிறுவனங்கள்.


அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது சமூக நலனுக்கும் உகந்ததல்ல. தனி நபர் நலனுக்கும் நல்லதல்ல. தொலைக்காட்சியின் வருகைக்குப் பின்னர் ஒரே குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அந்நியப்பட்டுள்ளனர். குடும்பத்துக்குள் கூடிப்பேசுதல் என்பது பெருமளவு குறைந்துள்ளது. குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக்கூடக்காணாது தொலைக்காட்சி பார்ப்பதில் மூழ்கிக் கிடக்கிறார்கள். விடுமுறை நாட்களில் விருந்தினரை சென்று பார்ப்பதிலும், வீட்டிற்கு வருகிற விருந்தினர்களை உபசரிப்பதிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொலைக்காட்சியில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் காணும் பொருட்டு தங்களின் செயல் திட்டங்களைத் தள்ளிப் போடுகிறார்கள். பலருக்கும் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஆரம்பிக்கு முன்னே வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்ற எண்ணமும் பெருகி உள்ளதைக் காண இயலும்.

அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களின் நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலும் தேவையான விடயங்களை அறிந்து கொள்வதற்குப் பதிலாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் மட்டுமே தங்களின் ஆர்வத்தை செலுத்துகிறார்கள். இன்றைய இளைஞர்களுக்கு நாட்டின் பொது நலம் சார்ந்த பிரச்சினைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது அல்லது இல்லை என சொல்லலாம்.

அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் விளைவுகளை சில புள்ளி விவரங்களுடன் காணலாம்.

அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் உடற்பருமனாவதற்கும் தொடர்புள்ளது என RTL (Radio Television Luxumberg Entertainment channel) மற்றும் OECD (Organaisation for Economic Cooperation and develeopement) ஆகிய இரண்டும் இணைந்து நடத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் குழந்தைகள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் ஓடி விளையாடுவது குறைந்துள்ளது. தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்களைப் பார்த்து, அதில் காட்டுகிற உணவுப் பொருட்களையும், அதிக கொழுப்புள்ள தின்பண்டங்களை வாங்கி உண்ணுவதாலும், தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே நொறுக்குத் தீனி சாப்பிடுவதாலும்தான் உடற்பருமன் ஆகிறது.

சமூக நலனில் அக்கறையின்மையும், பொது நலச்சேவை செய்வது பெருமளவு குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது. Social Trust மிகவும் குறைந்து காணப்படுகிறது. அதே வேளையில் அதிகம் தொலைக்காட்சி பார்க்கிற நாடுகளில் ஊழலும் அதிகமாக உள்ளது என்று தெரிவித்துள்ளது.





நரம்பியல் விஞ்ஞானிகள் விளம்பரங்களுக்கும் நுகர்வு மனநிலைக்கும் நாம் ஏன் தள்ளப்பட்டுளோம் என்பதற்கு நான்கு காரணங்களை முன்வைக்கிறார்கள்.

முதலாவதாக மனித மூளையானது சூழ்நிலைக்கேற்றாற் போல மாறும் தன்மை கொண்டது. ஆகையால் கேட்கிற, பார்க்கிற விடயங்கள் மூளையில் எளிதாகப் பதிந்து விடுகின்றன. இது போன்ற காரணங்களால் மூளை காலத்துக்கேற்றாற் போல தொடர்ச்சியாக புதுப்புது நிகழ்வுகளை பதிவு செய்து கொள்கிறது. தியானம் செய்வது மன அமைதியைத் தரும். ஆனால் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் மன அமைதி கெடும். மேலும் மகிழ்ச்சி இராது என நரம்பியல் விஞ்ஞானிகள் கருத்துரைக்கிறார்கள்.

இரண்டாவதாக பெண்களைக் கவர்ச்சியாகக் காண்பிப்பதாலும் பாலியல் சிந்தனைகளைத் தூண்டி விடுவதாலும் மனிதர்களின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படுகின்றன.

மூன்றாவதாக விளம்பரதாரர்களால் அறிமுகம் செய்யப்படும் பொருட்களை மேலும் மேலும் வாங்க வேண்டும் என்ற நுகர்வு மனநிலையை இளைஞர்களிடமும் குழந்தைகளிடமும் விளம்பரங்கள் ஏற்படுத்தியுள்ளன.

நான்காவதாக, பெரும்பாலும் தெளிவற்ற மனநிலையிலேயே நாம் இருக்கிறோம். ஆகையால் நாம் வாங்குகிற பொருள் தேவையா தேவையற்றதா என அறியாத குழப்ப நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள் நரம்பியல் விஞ்ஞானிகள்.

விளம்பரங்களின் மூலமாக ஏற்பட்ட அடிமை நுகர்வு மனப்பான்மையாலும், அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதாலும் மன அமைதி கெடுகிறது. இதிலிருந்து வெளிவர மனதைத் தன்வயப்படுத்த வேண்டும். நுகர்வு கலாசாரத்திலிருந்து விடுபடவேண்டும். ஓய்வு நேரத்தை நல்வழிகளில் உபயோகப்படுத்தக் கற்றுக்கொடுக்க வேண்டும். சிறந்த கல்வி, இயற்கையோடு இயைந்த தன்மை, அடுத்தவர்களோடு ஒருங்கிணைத்து செயல்படுதல் என சிறு வயதிலிருந்தே பாடசாலைகளும் பெற்றோரும் இயங்கவேண்டும். வளமிக்க வாழ்வைத் திரும்பப் பெறவும் தங்களை மேம்பட்ட சமூகவாதிகளாக அடையாளப்படுத்தவும் வேண்டுமானால் இளைய சமுதாயத்தின் கனவுச் சிதறல்களைத் தடுத்தாகவேண்டும்.

# புதிய நீதியரசர் பதவியேற்பு; 3 நீதியரசர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

உயர் நீதிமன்ற புதிய நீதியரசர் பதவியேற்பு நிகழ்வில் மூன்று நீதியரசர்கள் கலந்து கொள்ளவில்லை. நீதித்துறைக்கும் உத்தியோக பற்றற்ற சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடுகளும், மோதல்களும் உள்ள நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் ரோகினி மாரசிங்கவின் வைபவ ரீதியான அமர்வின்போது மகத்தான வரவேற்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அளிக்கப்பட்டது.

எனினும் இந்த அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 10 பேரில் ஆர்.ஏ.என்.காமினி அமரதுங்க, சந்திர ஏக்கநாயக்க மற்றும் ஈவா வணசுந்தர ஆகிய மூன்று நீதியரசர்களும் கலந்து கொள்ளவில்லை.

நீதியரசர் எஸ்.ஐ.இமாம் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான ரோகினி மாரசிங்க உயர் நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

# 13 ஆவது சட்டத்தை இல்லாதொழிக்க நாடாளுமன்றில் சட்டத்திருத்தம்

## கொண்டு வருகிறது ஹெல உறுமய



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை செயலிழக்கச் செய்வதற்கான சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு ஜாதிக ஹெல உறுமய முடிவு செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக, அந்தக் கட்சியின் பிரதிச்செயலர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை செயலிழக்க வைப்பதற்கான நகர்வைத் தாம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாடாளுமன்றத்தில் முன்னெடுக் கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார. வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடாத்தினால், தமிழீழத்தை அமைப்பதற்கு இடமளித்ததாகிவிடும் என்று நாம் அரசாங்கத்தை எச்சரித்தோம்.

விடுதலைப் புலிகள், போரின மூலம் அடைய முடியாது போனதை தேர்தல் மூலம் அடைவதற்கு அது இடமளித்ததாகிவிடும். என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு அமைய 13 ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடாத்துவதற்கு முன்னதாக, மாகாணசபைகளையே ஒழிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# மக்களின் பாதுகாப்பிற்காகவே யாழ்., வன்னியில் இராணுவ பிரசன்னம்

## கூறுகிறார் கோத்தாபய



(கொழும்பு)

பாதுகாப்பு விவகாரங்களில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுததிக்கொள்ளப் போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் வன்னியில் இராணுவத்தினரின் பிரசன்னமானது மக்களின் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியே காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையினர் நிலைநிறுத்தப்படும் நடவடிக்கையானது இன்றியமையாதது எனவும் சில தரப்பினர் இதனைத் தங்கள் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அரசாங்கங்கள் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தவறியதனால் பாரிய பின்விளைவுகள் ஏற்பட்டதாகவும், அதே தவறை தாமும் செய்ய விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கிலும் வன்னியிலும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்துடன் ஒப்பீடு செய்யும் போது பாரியளவில் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்காமல் இருக்கக்கூடிய சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# பத்திரிகை கார்ட்டூன்கள் கவலைப்படும் டலஸ்

(கொழும்பு)



பத்திரிகைகளில் வெளியாகும் கார்ட்டூன்களில் அமைச்சர்கள் திருடர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் காட்டப்படுவதாக இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எனினும் நல்ல அமைச்சர்கள் பலரும் அரசாங்கத்தில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாத்தறையில் இடம்பெற்ற பொது வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லா இடத்திலும் மோசடிக்காரர்கள் இருப்பதாகவும் ஆனால் அவ்வாறில்லாதவர்களும் இருப்பதாகவும் ஒரே கண்ணோட்டத்தில் அனைவரையும் பார்க்கக் கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும் இதுவே இவ் அரசு மற்றைய அரசாங்கங்களிலிருந்து வேறுபடுகின்றமைக்கான முக்கிய காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்குத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதிக்கு திண்டாட்டம்

## என்கிறார் சிறிதுங்க ஜயசூரிய

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலை நடாத்துவதா அல்லது அதனை நடாத்தாமல் விடுவதா என்ற திண்டாட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளார் என தேசிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம் உள்ளது. இதற்கான உறுதிமொழியை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள அரச தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் சகபாடிகளான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க போன்றோர் வடக்கு தேர்தலை நடாத்த வேண்டாமென ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதா இல்லையா என்ற குழப்ப நிலையில் உள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யுத்தக்குற்றச் செயல் ஆதாரம் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல் ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு இராணுவம் கோரிக்கை விடுத்துள்ளது. யுத்தக் குற்றச்செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பில் விசாரணை நடாத்தி, நடவடிக்கை எடுக்க முடியும் என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் சனல் 4 ஊடகம் அகியவற்றின் தகவல்களின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றங்களின் ஊடாக இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சனல் - 4 ஊடகத்தின் சகல குற்றச்சாட்டுக்களும் போலியானவை என்பதனைத் திட்டவட்டமாக அறிவிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், தங்களது இருப்பிற்காக புலம்பெயர் தமிழ் சமூகம் இலங்கைப் படைவீரர்களுக்கு எதிராக பல்வேறு போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்ற நாடு என்பதனை வெளிப்படுத்த சில தரப்பினர் முயற்சிக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்காக இவ்வாறு போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது எனவும் குற்றச்சாட்டுக்கள்போலி என நிரூபிக்கப்பட்டால் அவர்கள் நாடு திரும்ப நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பயங்கரவாதத்தின் முதல் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களே!

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்தின் முதல் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களாக இருந்தன. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உயிரூட்டுவதே எங்களுக்கு முக்கியமானதாக இருந்தது.

அதற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது என்பதுடன், பயங்கரவாதத்தின் செயற்பாட்டினால் யாழ். மேயரே முதலாவதாக பலியாகினார் என்பதனை ஞாபகமூட்டுவதற்கு விரும்புகின்றேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய உள்ளூராட்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2013 பொதுநலவாய உள்ளூராட்சி மாநாடு உகண்டாவிலுள்ள கம்பாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த மாநாட்டில் "அபிவிருத்தியுடனான உள்ளூராட்சி அபிவிருத்தியில் உள்ளூராட்சிக்கு முக்கிய இடத்தை வழங்குதல்" என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி உரையாற்றினார்.

அங்கு, ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனநாயக விழுமியங்களை எடுத்தியம்புவதற்கு உள்ளூராட்சிமுறையையே நடை முறைப்படுத்தி வந்துள்ளனர். கி.மு.4 ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகவே அபிவிருத்தி மக்களை நேரடியாக சென்றடைகின்றது. அது நடைமுறைச் சாத்தியமானதும், ஆக்கபூர்வமானதுமாகும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட அளவு அரச தலையீடும், சமமான பங்களிப்பும் சகலருக்கும் போய்ச்சேருவதை உறுதிப்படுத்தி இருப்பது அவசியமானதாகும்.


இன்றைக்கு இருபத்தி எட்டு வருடங்களுக்கு முன்பு இதேபோன்று ஒரு நாளில்தான் 146 அப்பாவி பொதுமக்கள் ஸ்ரீ மகா போதிக்கு அண்மையில் பயங்கரவாதிகளினால் கொல்லப்பட்டனர் என்றும் அதைப்பற்றிப் பேசுவதற்கு ஒரு மனித உரிமைகள் இயக்கம் அன்றில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் ஆட்சியே பயங்கரவாதிகளின் முதலாவது இலக்காக இருந்தது. இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன் முதலாவதாக உள்ளூர் ஆட்சியையே வழமைக்குக் கொண்டுவந்து பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தின் முதல் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களாக இருந்தன. வடக்கில், யாழ்ப்பாண மேயர்தான் பயங்கரவாதத்தின் முதலாவதாகத் தாக்குதலில் உயிரிழந்தவர் என்பதனை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

நிரந்தர சமாதானமும், பொருளாதார ஸ்திரத்தன்மையும் இரண்டு தூண்களாக நின்று இலங்கையின் துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு வித்திட்டுள்ளது என்றும் மேலும் தெரிவித்தார்.

# காணி சுவீகரிப்பு விடயத்தில் ஈ.பி.டி.பி. துணை போகாது



(யாழ்.நிருபர்)

மக்களது காணி சுவீகரிப்பு மற்றும் கபளிகரமான செயற்பாடுகளிற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்றுமே துணை போகாது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நிலையப் பொருளாளர் கனிஸ்ரன் தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்வேறு துன்ப, துயரங்கள், இடப்பெயர்வுகளின் மத்தியிலும் தனது 50 ஆவது அகவையில் கால்பதிக்கும் நாமகள் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் பாராட்டிற்குரியது. இவ் ஐம்பது வருடகால அனுவபங்களை சுமந்தே நீங்கள் வெற்றிப்பாதையை எட்டியுள்ளீர்கள்.

எமது பிரதேசங்களில் தொடர்ந்த வன்முறை முடிவிற்கு வந்துள்ள நிலையில், இப்பிரதேச மக்களுக்கு பல தேவைகள், பல குறைபாடுகள் உள்ளன. இவற்றைப் பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அவற்றினைப் பெற சரியானதும், நடை முறைக்குச் சாத்தியமானதுமான வழியில் முயலவேண்டும்.

இச் சனசமூக நிலைய சமூகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய நிலைய கட்டட புனரமைப்பிற்கு இவ்வாண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிஒதுக்கீட்டில் இருந்து நிதி ஒதுக்கப்படும் அதேவேளை உங்களது ஏனைய எதிர்பார்ப்புக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றோம். இவ்வாறே ஏனைய விடயங்களிலும் நியாயமானதும், சரியானதுமான வழியில் நீங்கள் செயற்படு வீர்களானால் நிச்சயம் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன்ரின்(உதயன்), தெல்லிப்பளை பிரதேசசெயலர் சிறிமோகனன், ஈ.பி.டி.பி.யின் வலி.வடக்கு இணைப்பாளர் ஜெயபால சிங்கம் (அன்பு), துணை இணைப்பாளர் மகேந்திரன் (வள்ளுவன்), கிராம அலுவலர் பாலேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர்களுடன் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத் தேர்தல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.ஞானம்ஸ் ஹொட்டலில் நடைபெறவுள்ளது.

வாக்காளர் பட்டியல், மீளாய்வு, வாக்காளர் தினம் மற்றும் தேர்தல் நடைமுறைகள் பற்றிய விளக்கங்கள் வழங்குமாறு ஊடகவியலாளர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேர்தல் தலைமைச்செயலக பிரதி ஆணையாளர் கலந்துகொள்ளவுள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(17.05.2013 - வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 03 ஆம் திகதி.
நட்சத்திரம் ஆயிலியம் பின்னிரவு 12.19 வரை. திதி ஸப்தமி மாலை 6.04 வரை. இராகுகாலம் 10.23 - 11.53 வரை.
சுபநேரம் 05.53 - 07.23 வரை மரணயோகம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** செய்த நன்மைக்கு பலன் தேடிவரும். உற்சாக மனநிலை. தொழில், வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு. சமூக அந்தஸ்து உயரும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். நண்பர்களுடன் விருந்து விசேஷம்.

**ரிஷபம்** பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். நண்பருக்கு இருந்த மனக்கிலேசம் சரியாகும். தொழில், அபிவிருத்தி. ஆதாய பணவரவு. இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். எதிர்பார்த்திருந்த வெளியூர் பயணத்திற்கும் வாய்ப்பு.

**மிதுனம்** சிறிய வேலைக்கும், அதிக முயற்சி தேவைப்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழியில் நடத்தும். தொழில், இருக்கிற அனுகூலத்தை பாதுகாக்கவும். சேமிப்பு செலவுக்கு பயன்படும். வாகன பயணத்தில் கவனம். புதிய அறிமுகம் வரும்.

**கடகம்** பொது நலன் பற்றிய அக்கறை மிகுந்திருக்கும். சமூகத்தில் நற்பெயர். தொழில் செழித்து, திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவு திருப்திகரம். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர். உடல்நலம் பலம் பெறும். குடும்ப மகிழ்வு.

**சிம்மம்** பேச்சில் நிதானம் பின்பற்ற வேண்டும். வீண் கௌரவத்திற்காக போட்டி, பந்தயம் வேண்டாம். கவனத்தை சொந்தப் பணிகளில் திருப்பிவிடுக. தொழில் குறுக்கீடு, மாற்று உபாயத்தால் சீராகும். எதிர்பார்ப்புகளைக் குறைப்பது நலம்.

**கன்னி** சிலரது மறைமுக இடையூறு இருக்கும். வீண் விவாதம் தவிர்க்கவும் தொழிலில் சூழ்நிலை உணர்ந்து, விலகுவது நல்லது. சிறு கடன் பெற நேரும். முடிக்க வேண்டிய வேலை ஒன்றில் தடங்கல் வரும். தொலைபேசியில் நல்ல செய்தி.

**துலாம்** இறங்கும் செயலில், நெருக்கடியான நிலைமை ஏற்படலாம். பொறுமை அவசியம். தொழில், மந்தகதியில். வரவை விட செலவு கூடும். வாகன கவனம். சார்ந்தவர்கள் கோபமூட்டும் விதமாக நடந்துகொள்வர். வழிபாட்டில் மன அமைதி.

**விருச்சிகம்** செயலில் குளறுபடி ஏற்படலாம். கருமமே கண்ணாயிருந்தால் ஜெயிக்கலாம். தொழில், சுமாரான அளவில். உறவினர் வகையில், அதிக பணச் செலவு. ஏமாற்றம் தவிர்க்க எதிர்பார்ப்பைக் குறையுங்கள். போக்குவரத்திலும் கவனம்.

**தனுசு** தொடங்கிய செயல்கள் வெற்றி பெறும். மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். நன்மைகள் தேடிவரும். தொழில், மாற்று உபாயங்கள் பின்பற்றுவீர்கள். வரவு கூடும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம். பயண மாற்றம்.

**மகரம்** நண்பர் செய்த உதவிக்கு, பிரதியுபகாரம் செய்வீர்கள். மனதில் மகிழ்ச்சி கூடும். தொழில், இருந்த இடையூறு விலகும். சராசரி பணவரவு. கடன் மீளும். உறவினர் உங்களைப் புரிந்து கொண்டாடுவர். உடல் நலம் பலம் பெறும்.

**கும்பம்** எதிர்கால நலனில் கூடுதல் அக்கறை. தொழில், வளர்ச்சிக்கு கூடுதல் முயற்சியும், உழைப்பும் உதவும். வரவை விட செலவு கூடும். பாதுகாப்பில், தகுந்த கவனம் வேண்டும். வேலையிடத்தில் வரும் சச்சரவுகளில் விலகிச் செல்க.

**மீனம்** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கஷ்டங்கள் விலகி, எதிர்பார்த்த நன்மை பெறுவீர்கள். தொழில், அபரிமிதமான வளர்ச்சி. தாராள பணவரவில், குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சிக்கு அழைப்பு.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி தெங்குருபிட்டி அருள்மிகு பெரும்படையம்மன் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அடியார்களின் எண்ணெய்க்காப்புச்சாத்தும் வழிபாடும் இடம்பெறும். கும்பாபிஷேக கிரியைகளை நல்லை ஆதீன சிவாச்சாரியார் கலாநிதி சிவஸ்ரீ ச.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

## வருடாந்த மகோற்சவம்

(கரணவாய்)

கரணவாய் அருள்மிகு உச்சிற் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று வியாழக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 20 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 21 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும், 22 ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும்; 23 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி இரதோற்சவமும் 25 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## விநியோகம்

பருத்தித்துறை பிரதேச சபையினால் தற்போது 2013 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமைத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகட்டினைப் பெற்றுக் கொள்ள வருவோர் தேசிய அடையாள அட்டை, துவிச்சக்கரவண்டி இலக்கம் என்பனவற்றை கொண்டுவரும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

## தானியப்பயிர்கள் அறுவடைக்குத் தயார்

(தம்பாலை)

தம்பாலை, வளலாய் போன்ற பிரதே விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட எள்ளு, உழுந்து, பயறு போன்ற பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பயிர் வகைகள் குறைந்த செலவுடன், குறைந்த காலத்திற்குள் விளை நிலையை அடைந்து விடும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எனவே தொரடந்து இப்பயிர் வகைகளைத் தாம் செய்கை பண்ணி வருமானத்தைப் பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (85)

## இணையத்தள வடிவமைப்புப் போட்டி யாழ்.வேம்படி முதலாமிடத்தைப் பிடித்தது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை நோக்கிய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மாகாணக் கல்வித்திணைக்களமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணனிச் சங்கமும் இணைந்து யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கடந்த வருடம் 'இணையத்தளம் 2012' என்ற பெயரில் இணையத்தள வடிவமைப்புப் போட்டி ஒன்றை நடாத்தியது.

இதன் முடிவுகள் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி 1 ஆம் இடத்தை யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையும், 2 ஆம் இடத்தை யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையும் பெற்றுக் கொண்டன. (10)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் மேற்கு திருவருள் மிகு ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி கும்பபூசையுடன் ஆரம்பமாகி தொடந்து தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

உற்சவ தினங்களில் காலை 10 மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பமாகி 11.45 மணியளவில் மூலஸ்தானப் பூசையுடன் பகல் திருவிழா நிறைவுபெறும். (85)

## அதிர்ச்சியில் ஷில்பா



(மும்பை)

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை சேர்ந்த ஸ்ரீசாந்த் உள்ளிட்ட 3 வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளரும், நடிகையுமான ஷில்பா ஷெட்டி மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளார்.

அவரது சார்பில் ராஜஸ்தான் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எங்கள் அணியின் 3 வீரர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தகவல் எங்களுக்கு தெரியவிக்கப்பட்டது.சூதாட்டத்தில் ஈடுபட்டு அவர்கள் கைது செய்யப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது. டில்லி பொலிஸாரின் விசாரணைக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுப்போம்.

ஆட்டத்தின் நலனுக்கு எதிராக நடைபெறும் எந்த செயலையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். குற்றம் நிருபிக்கப்பட்டால் வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரிக்கெட் சூதாட்டம் கைதானார் ஸ்ரீசாந்த்



(மும்பை)

கிரிக்கெட் சூதாட்ட புகார் காரணமாக, பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் உள்ளிட்ட 3 வீரர்களும், 7 புக்கிகளும் மும்பைபொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். ஆறாவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இத்தொடரில், ராஜஸ்தான் அணி சார்பில் விளையாடும் பிரபல வீரர் ஸ்ரீசாந்த்தை, மும்பையிலுள்ள அவரது நண்பர் வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். மேலும், அதே அணியைச் சேர்ந் [illegible]கிட் சவான் மற்றும் அஜித் சர்மா ஆகியோரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதற்காக டில்லியிலிருந்து சிறப்பு பொலிஸ் படை மும்பை வந்துள்ளது. நேற்று முன்தினம் மும்பையில், மும்பை அணிக்கு எதிரான போட்டியில் தோல்வியுற்ற ராஜஸ்தான் அணியினர் விடுதிக்குத் திரும்பிய சில மணி நேரங்களில் இந்தக் கைது சம்பவங்கள் நடந்துள்ளன. வீரர்கள் மூன்று பேர் மீதும் இந்திய குற்றவியல் சட்டம் 420 (ஏமாற்றுதல்), 120 பி ( சதி செய்தல்) உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக 7 புக்கிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விசாரணைக்காக டில்லி அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது தொடர்பாக டில்லி பொலிஸ் வட்டாரங்கள் கூறுகையில், கிரிக்கெட் சூதாட்டத்தில் இந்த வீரர்களுக்கு உள்ள தொடர்பு குறித்து புகார்கள் வந்ததையடுத்து, பொலிஸார் அவர்களை இரகசியமாக கண்காணித்து வந்ததாகவும், தற்போது விசாரணை நடக்கவிருப்பதால், இது குறித்து மேலும் விபரிக்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

வீரர்கள் கைது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ராஜஸ்தான் அணி நிர்வாகம், தங்களது வீரர்கள் 3 பேரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்ததாகவும், அது தங்களுக்கு வியப்பை அளித்ததாகவும் தெரிவித்துள்ளது. மேலும், இவ்விவகாரம் தொடர்பாக, பி.சி.சி.ஐ.,யுடன் தாங்கள் தொடர்பில் இருப்பதாகவும், இவ்விவகாரத்தில் பொலிஸாரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## உறுதி இல்லை



(லண்டன்)

இங்கிலாந்து நாட்டின் ரென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே, முதுகின் வலது பக்கத்தின் கீழ்ப்பகுதியில் ஏற்பட்டுள்ள வலி காரணமாக, எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் பங்கு பெறுவது சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.

உலகின் இரண்டாம் நிலை வீரரான ஆண்டி முர்ரே, இந்த வலியின் காரணமாக சமீபத்தில் நடந்த ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் விலக நேர்ந்தது. சென்ற வாரம் மட்ரிட்டில் நடைபெற்ற காலிறுதிச் சுற்றில் தோற்க நேரிட்டபின், சிகிச்சைக்காக சில நாட்கள் முர்ரே ஓய்வெடுத்துக் கொண்டார்.

தற்போது உடல்நிலைத் தேர்வில் தகுதி பெற வேண்டி, நேற்று முன்தினம் 26 வயது நிறைவடைவதை முன்னிட்ட பிறந்த நாள் கொண்டாட்டங்களையும் ஒத்தி வைத்துள்ளார்.

பாரிசில் நடைபெறும் பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் விளையாடுவது குறித்து அவரால் உறுதியாக ஏதும் கூற இயலவில்லை என அவரது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஐ.பி.எல். துளிகள்

### வார்த்தை மோதல்



ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியின் போலாட்டும், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வட்சனும் களத்தில் வார்த்தை மோதலில் ஈடுபட்டனர்.வட்சன் ஆடவந்தபோது,போலாட் அவரது காதில் ஏதோ கூறிவிட்டு சிரித்துக் கொண்டே போனார். இதனால் கோபம் அடைந்த வட்சன் போலாட்டை திட்டினார். இதனையடுத்து போட்டி நடுவர்கள் இருவரையும் எச்சரித்து அனுப்பினர். பின்னர் வட்சனின் பிடியைப் பிடித்த போலாட் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார். அப்போது வட்சனை ஓய்வறை நோக்கிச் செல்லுமாறு கைவிரலால் காட்டினார். பின்னர் மைதான எல்லைக் கோட்டிற்கு அருகில் அமர்ந்திருந்த வட்சனை மீண்டும் போலாட் வம்புக்கு இழுத்தார். மறுபடியும் கோபமடைந்த வட்சன்போலாட்டை திட்டிவிட்டுஓய்வறைக்குச் சென்றார்.

### இதெல்லாம் சகஜமப்பா



ஆறாவது ஐ.பி.எல் தொடர் முழுவதும் பொறுமையாக இருந்த ராவிட், நேற்று முன்தினம் நடந்த மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கோபமடைந்தார். ஜோன்சன் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் கார்த்தியிடம் ராவிட் பிடியானது. இதற்கு நடுவரும் ஆட்டமிழப்புக் கொடுத்தார். இதனால் ஏமாற்றமடைந்த ராவிட் நடுவரை நோக்கி கோபமாக ஏதோ கூறினார். பின்னர் கோபத்தில் துடுப்பை உடைக்க முயன்றார். போட்டி முடிந்த பின்னர் செய்தியாளர்களைச்சந்தித்த அவர், 'ஆட்டமிழப்புக் கொடுத்ததால் நான் ஏமாற்றம் அடைந்தேன், அதனால் அந்த சமயத்தில் எனக்கு கோபம் வந்தது, மற்றபடி ஒன்றும் இல்லை, சிறிது நேரம் கழித்து இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டேன். கிரிக்கெட்டில் இதெல்லாம் சகஜம் என்று கூறினார்.

# ஐ.பி.எல்.இல் அசத்துபவர்கள்



ஆறாவது ஐ.பி.எல். தொடரில் பழசும், புதுசும் [illegible] ஆறு பேர் அசத்தி முன்னிலை பெற்று அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளனர். இந்த வகையில் அதன் விபரம் வருமாறு:

ராவிட் (ராஜஸ்தான் றோயல்ஸ் - வயது 40): இந்த ஐ.பி.எல் தொடரில் வயதான வீரர்களில் அசத்தும் முதல் வீரர் ராகுல் ராவிட் தான்.. கப்டன் பொறுப்பையும், தொடக்க ஆட்டக்காரர் பொறுப்பையும் சிறப்பாக செய்து அசத்தி வருகிறார். இந்தத் தொடரில் ராவிட் 14 ஆட்டங்களில் 387 ஓட்டங்கள் குவித்து அசத்தி வருகிறார் (இதில் 5 அரைச் சதங்களும் அடங்கும்). அதுமட்டுமின்றி அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு வாய்ப்பை வழங்கி அசத்தியுள்ளார். அந்த அணியின் 18 வயதான விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரர் சம்சனை சிறப்பாக ஊக்கப்படுத்தி அசத்தி வைத்திருக்கிறார் ராவிட். இந்த ஐ.பி.எல் தொடரில் அணியை சிறப்பாக வழிநடத்திய சிறந்த கப்டன் என்ற பெயரும் ராவிட்டுக்குத் தான் சேரும்.

மைக்கல் ஹசி (சென்னை சூப்பர் கிங்ஸ் - வயது 37): சென்னை அணியின் மிகப்பெரிய நம்பிக்கை நட்சத்திரம். இவரது நேர்த்தியான ஆட்டம் சென்னை அணிக்கு மிகப் பெரிய பலம். இந்த ஐ.பி.எல் தொடரில் மிகச் சிறந்த தொடக்க ஆட்டக்காரர்களில் ஹசியும் ஒருவர். இந்த தொடரில் அதிக அரைச்சதம் அடித்த பட்டியலில் ஹசி முதல் இடத்தில் இருக்கிறார் (5 அரைச் சதங்களுடன்). இந்த தொடரில் ஓரேஞ்ச் தொப்பியைப் பெற ஹசிக்கு வாய்ப்பு உள்ளது. அவர் 14 ஆட்டங்களில் 640 ஓட்டங்கள் குவித்து, அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் [illegible]ஆவது இடத்திலுள்ளார்.

கில்கிறிஸ்ட் (கிங்ஸ் லெவன் பஞ்சாப் - வயது 41): இந்தத் தொடரில் தொடக்கத்தில் தடுமாறி வந்த கில்கிறிஸ்ட், பெங்களூர் அணிக்கெதிரான ஆட்டத்தில் 85 ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றி பெற செய்து அசத்தியுள்ளார். இந்த ஆட்டத்தின் முலம் அவர் தன் பழைய அதிரடிக்குத் திரும்பியுள்ளார். தன் மீது எழுந்த விமர்சனங்களுக்கு தற்போது கில்கிறிஸ்ட் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

அசத்தும் புதுமுகங்கள்

சம்சன் (ராஜஸ்தான் றோயல்ஸ் - வயது 18): ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் 18 வயதான விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர். சாம்சனின் ஆட்டம் சிறப்பாக இருக்கிறது. இவரை அடுத்த டோனி என்று முன்னாள் இந்திய வீரர் பரூக் என்ஜினியர் புகழாரம் சுட்டியுள்ளார். இவர் 7 ஆட்டங்களில் 187 ஓட்டங்களை குவித்து அசத்தி வருகிறார். பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் 63 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றி பெறச் செய்து அனைவரின் கவனத்தையும் தன் பக்கம் திருப்பினார்.

மோகித் சர்மா (சென்னை சூப்பர் கிங்ஸ் - வயது 24) இந்த ஐ.பி.எல் தொடரில் அசத்தும் புதுமுக பந்து வீச்சாளர் இவர் மட்டும் தான். இவரது நேர்த்தியான பந்துவீச்சால் எதிர் அணி தொடக்கத்தில் ஓட்டம் குவிக்க கூடுமாறி வருகிறது. ஒவ்வொரு ஆட்டமும் சராசரியாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தி வருகிறார். இவர் 12 ஆட்டங்களில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவர் விரைவில் இந்திய அணியில் இடம் பெறுவார் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

விகாரி (சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - வயது 19): சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் சிறந்த நடுவரிசை ஆட்டக்காராக விகாரி அசத்தி வருகிறார். அவர் 14 ஆட்டங்களில் 215 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஹைதராபாத் அணியில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் அசத்தி வருகிறார்.

# அனைத்து ஐ.பி.எல். தொடர்களிலும் பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியமை சாதனை



(சென்னை)

இதுவரை நடந்துள்ள 6 ஐ.பி.எல். போட்டித் தொடர்களிலும் அடுத்த சுற்றுக்கு (பிளேஓப்) நாங்கள் முன்னேறி உள்ளோம். அணிக்கும், அணியின் உரிமையாளருக்கும் இது மிகப்பெரிய சாதனை விடயம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி தெரிவித்தார்.

கடந்த சில ஆட்டங்களில் நான் அடித்து ஆட முயற்சித்தேன். ஆனால் எனது இயல்பான ஆட்டம் வெளிப்படவில்லை. இந்த ஆட்டத்தின் தொடக்கத்தில் கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டு, அதன் பின்னர் அதிரடியில் இறங்கினேன்.

வீரர்கள் தங்கியிருக்கும் விடுதியில் இருந்து மைதானத்திற்கு வருவதற்கு 15 முதல் 20 நிமிடங்கள் ஆகும். அந்த நேரத்தில் நான் ஆட்டத்தை பற்றிச் சிந்திக்க மாட்டேன். பஸ் பயணத்தை இரசித்துக் கொண்டே வருவேன். சுற்றுப்புறக் காட்சிகளை பார்ப்பேன். போட்டிக்கு முன்பாக, நான் எதைப் பற்றியும் யோசிக்காமல் இயல்பாக இருக்க முயற்சிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்




ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்
சன் ரைசர்ஸ்
இடம் : ஹைதராபாத்
இரவு 8.00 மணி

# பாடசாலைகளுக்கிடையிலான் மாவட்ட எறிபந்து மெமோறியல், யூனியன் கல்லூரி அணிகள் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்துப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மற்றும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன. மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட எறிபந்துப் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் முதன் முறையாக இடம்பெற்ற இப்போட்டியில் 19 வயதுப் பிரிவினரே பங்குகொண்டனர்.

இதில் ஆண்களுக்கான போட்டியில் எட்டுப் பாடசாலை அணிகளும், பெண்களுக்கான போட்டியில் பத்துப் பாடசாலை அணிகளும் பங்குகொண்டன.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 2 – 0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியும் மோதின. இதில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி 2 – 0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 25 – 19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செட்டை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை அணி 25 – 19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. வெற்றியை நிர்ணயிக்கும் இறுதி செட்டில் இரு பாடசாலை அணிகளும் ஆக்ரோசத்துடன் மோதின. இறுதியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி 25 – 21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி பிடித்துக்கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 2 – 0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அணியும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அணி 2 – 0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அணியும் மோதின. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. இறுதியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 25 – 10, 17 – 25, 25 – 20 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 2 – 0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (17)


மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை


தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

# யாழ்ப்பாண செயலகம் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையேயான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டி யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் மோதின.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாகக் காணப்பட்டதுடன் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு அணிகளும் கடும் பிரயத்தனத்துடன் களத்தில் மோதிக் கொண்டன. இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் தலா ஒருகோலை பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் கோல் பெறஎடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் போட்டி தலா ஒரு கோல் என்ற சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை உடைப்பு மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி தமது வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து 02 : 01 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அதிகாரி, பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், இர சிகர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (93)

# இலங்கை கனிஷ்ட வலைப்பந்து அணியில் புத்தூர் சோமஸ்கந்தா வீராங்கனை

(கொழும்பு)

இலங்கை கனிஷ்ட வலைப்பந்தாட்ட அணியில் யாழ். புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் முன்னாள் வீராங்கனை வேணிஜா இடம்பிடித்துள்ளார்.

எட்டாவது கனிஷ்ட ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள இலங்கை கனிஷ்ட வலைப்பந்தாட்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியின் முன்னாள் வீராங்கனை வேணிஜா இடம் பிடித்துள்ளார். தற்போது தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஆறுமுக சாதி ஜயலாலிடம் வேணிஜா கடந்த ஒன்றரை வருடங்களாக வலைப்பந்தாட்டப் பயிற்சி பெற்று வருகின்றார்.

பாடசாலைக் காலத்தில் கல்லூரிக்கு பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்து பெருமை சேர்ந்த வேணிஜா, நாட்டிற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் கனிஷ்ட ஆசிய வலைப் பந்தாட்டப் போட்டிகளில்சிறப்பான பெறுபேறுகளைவெளிப் படுத்தவாழ்த்துகள் எனவிளையாட்டு ஆர்வலர்கள் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ஆட்டங்கள்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட கரப்பந்தாட்டப்போட்டி இன்றைய தினம் முதல் வரும் 19ஆம் திகதி வரை பதுளை நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அணிகள் பங்குகொள்ளவுள்ளஇப் போட்டிகள் ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித்தொடரில் பங்குகொள்ளவுள்ள யாழ். மாவட்ட அணிகள் பதுளை பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய் வல்லுநர் போட்டி இன்றைய தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 14ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்த இப்போட்டி எதிர்பாராத விதமாக ஒத்திவைக்கப்பட்டதாகவும், இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு போட்டிகள் நடைபெறவிருப்பதால் பங்குகொள்ளவுள்ள அனைவரையும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேரய விரயத்தைத் தவிர்க்குமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

- சார்லஸ் -

# எல்லாத்துலயும் ஒரு அரசியல் இருக்கு

1




இணையத்தில் பரவலாகக் கண்ணில் படுவனவற்றை வாசிக்கையில் ஒன்றை உணரமுடிகிறது. ஒரு நல்ல சினிமா என்பது சமகால அரசியலைப் பற்றிப் பேசியிருக்கவேண்டும் என்கிற எண்ணம் நிறையப் பேருக்கு இருக்கிறது. கலையம்சம் என்பதை இரண்டாமிடத்திலேயே வைக்கிறார்கள். ஒரு படம் Politically Correct ஆக இருக்கிறது என்பதற்காகவே அது எத்தனை மோசமாக இருந்தாலும் கொண்டாடுகிறார்கள். தான் நம்பும் அரசியலுக்கு எதிராக இருக்கிறது என்பதாலேயே ஒரு படம் எவ்வளவு நன்றாக இருந்தாலும் பிடிவாதமாக நிராகரிக்கிறார்கள்.

திரைப்படம் என்று மட்டுமில்லை, ஒரு நாவலைப் பற்றிய விமர்சனக் கட்டுரையாக இருந்தாலும் கூட அதன் அரசியல் பற்றியே அதிகமும் எழுதப்படுகிறது. ஆனால் ஒரு கலைப் படைப்பை அதன் நுட்பமான கலை அம்சம், வடிவ ஒருமை, அழகியல் போன்றவற்றை மையமாக வைத்து விமர்சிப்பதே சரியானதென்று நான் நினைக்கிறேன். அதன் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதற்காக அது உருவாக்கப்பட்ட அரசியல் பின்னணி பற்றி எழுதலாம் தப்பில்லை. ஆனால் ஒவ்வொரு படைப்பையும் அது முன்வைக்கும் அரசியல் என்ன என்கிற ஆராய்ச்சியோடு மட்டுமே அணுகுவது, எடை போடுவது தவறு என்று நான் நினைக்கிறேன்.

கலை என்பது வெறும் பொழுதுபோக்குக்கானது, அரசியல்தான் சமூகத்தை வழிநடத்துவது, ஆகவே கலையை விட அரசியல் மேன்மையானது - முக்கியமானது என்கிற கருத்து பொதுவாகவே எல்லாரிடமும் இருக்கிறது. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. இதைச் சொல்வதற்காகப் பலரும் என்னைக் கேலி செய்யக் கூடும். திட்டக் கூடும்.

என் நிலைப்பாட்டை எனக்குத் தெரிந்த சினிமாவிலிருந்தே விளக்க முயற்சிக்கிறேன். உலக அளவில் மிக முக்கியமான படங்களில் ஒன்று "பைசைக்கிள் தீவ்ஸ்". நான் திரைப்படக் கல்லூரியில் படித்த போது இயக்குனர் ஹரிஹரன் (ஏழாவது மனிதன்) மூன்று நாள் பயிலரங்கு ஒன்றை அங்கு நடத்தினார். அதில் "பைசைக்கிள் தீவ்ஸ்" படத்தின் பின்னணியில் இருக்கும் இத்தாலிய அரசியல், இரண்டாம் உலகப்போர் தோல்விக்குப் பின்னான சூழல் (சர்வாதிகாரி முசோலினி கொல்லப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் எடுக்கப்பட்ட படம்) போன்றவற்றைச் சொல்லிப் படத்துக்குப் புதிய விளக்கம் ஒன்றை வழங்கினார். ஆனால் அது எதுவும் தெரிவதற்கு முன்பே ஒரு கலைப் படைப்பாக அது பெரும் உச்சத்தில் இருக்கிறது என்கிற முடிவுக்கு நான் வந்திருந்தேன். ஆச்சர்யம்தான்.

எந்த கிளாஸிக்கும் ஒவ்வொரு முறையும் முற்றிலும் புதியதாக எதையாவது நமக்கு வழங்கிக்கொண்டே இருக்கும் என்பதை நான் தெரிந்துகொண்டது அப்போதுதான். அதோடு, ஒரு நல்ல கிளாஸிக் படம் எக்காலத்துக்கும் எந்த நிலப் பரப்புக்கும் பொருந்தக்கூடிய அம்சங்களைத் தன்னிடம் கொண்டிருக்கும் என்பதையும், அந்தப் படம் எடுக்கப்பட்ட காலத்து அரசியல் சூழல் என்பது பிற்காலப் பார்வையாளர்களுக்கு வெறும் தகவல்களாகவே மிஞ்சும் - அவற்றால் அந்தப் படத்துக்கு எந்தப் பயனும் இல்லை என்பதையும் புரிந்துகொண்டேன். "பைசைக்கிள் தீவ்ஸ்" வெறும் இத்தாலிய அரசியலோடு சுருங்கிவிடும் படமே அல்ல. அது உலகம் முழுவதிலுமுள்ள எளிய மனிதர்களோடு, திக்கற்று நிற்பவர்களோடு நேரடியாக உரையாடக் கூடியதாக, காலம் கடந்து தேசம் கடந்து நிற்கக் கூடியதாக இருக்கிறது.

1933இல் எடுக்கப்பட்ட "கிங்கொங்" திரைப்படம் அந்தக் கால அமெரிக்க அரசியல் மீதான விமர்சனமே என்று நான் படித்திருக்கிறேன். ஆனால் கிங்கொங் படம் அப்படி சுருங்கக் கூடியதாக இருந்திருந்தால், உலகம் முழுவதும் ரசிகர்களை அது பெற்றிருக்க முடியாது, மீண்டும் மீண்டும் அந்தப் படத்தை வேறு காலகட்டங்களில் எடுத்திருக்கவும் மாட்டார்கள். அந்தப் படத்தின் கடைசி வசனமான "அழகுதான் அந்த மிருகத்தைக் கொன்றது" (It was Beauty Killed the Beast) என்பதிலிருந்து ஆரம்பித்து நாம் அந்தப் படத்திற்குள் எதிர்நீச்சல் போட்டு உள்ளே நுழைந்தால், அற்புதமான ஆழங்களுக்குள் இழுத்துச் சென்றுவிடும் கலைப்படைப்பு அது.

(தொடரும்)




ஒட்டகத்தின் சராசரி ஆயுட்காலம் 50. ஆண்டுகள்.

எடை 250 கிலோவிலிருந்து 680 கிலோ வரை!

நீரில்லாமல் 8 நாட்கள் வரை ஒட்டகம் உயிர் வாழும்.

மனிதனின், பிற விலங்குகளின் உடலில் இருந்து 12 வீதம் நீர்ச்சத்து இழப்பு ஏற்பட்டாலே மரணம்தான். ஆனால் ஒட்டகத்தின் உடலிலிருந்து 40 வீதம் நீர்ச்சத்து இழப்பு ஏற்பட்டாலும், எந்தப் பாதிப்பும் இல்லாமல், எங்கேயாவது புல் கிடைக்கிறதா? என்று தேடிக் கொண்டிருக்கும்.

# உலக விவசாயி!

ஏகநாலா என்ற கிராமத்தைச் சேர்ந்த பரத்வாஜன் என்ற செல்வந்தனான ஒரு விவசாயி தன்னுடன் உழுது கொண்டிருந்த கூலி ஆட்களை, மாடுகளை அவிழ்த்து விட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கூறினான்.

நண்பகல் நேரம் அது.

அனைவரும் மரத்தடி நிழலில் அமர்ந்து, மதிய உணவைச் சாப்பிடத் தொடங்கினர்.



அச்சமயத்தில் அந்தப் பக்கமாக ஓர் ஏழைச் சந்நியாசி வந்தார். கையில் ஓடேந்தி மௌனமாக நின்றார்.

பரத்வாஜன் உணவுக்காக நிற்கும் இந்தச் சந்நியாசியைப் பார்த்தான்.

அவனுக்கு ஏளனமாக இருந்தது. "ஏ, சந்நியாசியே! எதற்கு இப்படி பிச்சை எடுத்துப் பிழைக்கிறீர்? எங்காவது போய் வயலில் உழுது, உழைத்துப் பிழைக்கக் கூடாதா? என்னைப் பார். எனக்கு சோம்பேறித்தனமே பிடிக்காது. வயலை உழுது, விதையை ஊன்றிய பிறகுதான் நான் சாப்பிட வந்திருக்கிறேன்" என்றான்.

சந்நியாசி மெல்ல நகைத்தார். "நானும்தான் உழுகிறேன்" என்றார்.

"அப்படியா? அப்படியானால் உன் கலப்பை எங்கே? உழவு மாடுகள் எங்கே?" என்று கேட்டான் பரத்வாஜன்.

சந்நியாசி கூறினார், "பூமி முழுவதுமே என்னுடைய வயல்தான். முயற்சிதான் என் உழவு மாடுகள். நல்லெண்ணங்கள் என் விதைகள். உண்மையைக் கொண்டு நான் களையைப் பிடுங்குகிறேன். நல்ல காரியங்கள் என்ற விளைச்சலை அறுவடை செய்கிறேன். அறுவடையான இந்த உணவைக் கொண்டு நான் மனித சமுதாயத்தின் ஆத்மாக்களுக்கு உணவு பரிமாறுகிறேன். அப்பனே! உன்னைப் போல நானும் ஒரு விவசாயிதான்"

இந்த சொற்களைக் கேட்ட பரத்வாஜன், அந்த சந்நியாசி கௌதம புத்தர் என்பதை உணர்ந்தான்.

# தெரியுமா?








- நட்சத்திர மீனை பல துண்டுகளாக வெட்டினாலும் அவை அனைத்துமே புதிய மீன்களாக வளரும்.
- மூட்டைப் பூச்சி கடிப்பதால் ரத்தம் இழப்பாகுமே தவிர வியாதி எதுவும் வராது.
- காளான்கள் மருந்துகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறது.
- ஒட்டகங்களைவிட அதிக நாள் தண்ணீர் இல்லாமல் வாழும் பிராணி எலி.
- வெட்டுக்கிளியின் காது அதன் கால்களில் உள்ளது.
- ஹம்மிங் பேர்ட் என்ற பறவை பின்னோக்கியும் பறக்கும்.
- மிகச் சிறிய பிராணியான மூஞ்சூறுவின் இதயம் நிமிடத்துக்கு 1000 முறை துடிக்குமாம். மிகப் பெரிய பிராணியான திமிங்கிலத்தின் இதயம் நிமிடத்துக்கு 5 முறைதான் துடிக்குமாம்.
- தேனீ, எறும்பு, குளவி, மூட்டைப்பூச்சி, சிலந்தி, தேள், தத்துக்கிளி, வண்ணத்துப்பூச்சி இவைகளில் பெண் இனத்துக்கே சக்தி அதிகம்.
- நாய் இனத்தைச் சேர்ந்த கழுதைப்புலி மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடக்கூடியது.
- கொரில்லா அமைதியான குரங்கு. சைவ உணவையே சாப்பிடும்.
- தேள் ஒருவரைக் கொட்டிய பிறகு 30 நாட்கள் கழித்துத்தான் அடுத்தவரைக் கொட்டுவதற்கான விஷம் அதற்கு வரும்.
- பறவைகள், பாம்புகள், தவளைகள், எலிகள் ஆகிய உயிரினங்கள் சுமார் 5 மணி நேரம் முன்னதாகவே பூகம்பம் வரப்போவதை உணர்ந்து கொள்கின்றனவாம்.
- அணில் தனக்கு வேண்டிய பழங்கள் மற்றும் விதைகள் ஆகியவற்றைச் சாப்பிட்டுவிட்டு, மீதியை மண்ணுக்குள் குழி தோண்டி புதைத்து வைக்கும். திரும்ப அவற்றை எடுக்க வேண்டும் என்பதை மறந்து விடும்.

# வதைப்பவர் வேறு யாரும் இல்லை!



எண்ணங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. சிந்தனை மிக்கவரின் எண்ணங்கள் அவரைப் படைப்புத் திறன் உள்ளவராகச் செய்யும். இராமகிருஷ்ணர் கூறும் கதை ஒன்று:

ஊர்சுற்றி ஒருவன் தற்செயலாக சொர்க்கத்தில் நுழைந்துவிட்டான். அங்கே "கற்பகதரு" என்ற விருட்சம் இருந்தது. நாம் நினைக்கிற பொருளை உடனே கொடுக்கும் திறன் அந்த மரத்துக்கு உண்டு என்பார்கள்.

அந்த மனிதன் களைத்துப் போய் கற்பக விருட்ச நிழலில் படுத்துக் கண்ணயர்ந்துவிட்டான். பின்பு கண்விழித்தபோது கடுமையான பசி அவனுக்கு. "நல்ல சாப்பாடு கிடைக்குமா இங்கே?" என்று நினைத்தான். உடனே அறுசுவை உணவு அந்தரத்தில் வந்து நின்றது!

இந்த உணவு எப்படி வந்தது என்ற ஆராய்ச்சியில் எல்லாம் அவன் இறங்கவில்லை. அவன் பசி அப்படி... உடனே தட்டில் இருந்த உணவு அத்தனையும் கபளீகரம் செய்துவிட்டான். உண்ட களைப்பு... இங்கே ஒரு கட்டில் கிடந்தால் ஆனந்தமாகப் படுத்து ஓய்வெடுக்கலாமே என்று நினைத்தான்! அவ்வளவுதான்...அழகான கட்டில் வந்தது. நன்றாகச் சாய்ந்து படுத்துக் கொண்டான். "பணிவிடை செய்யப் பெண்கள் இருந்தால்..." என்று அவன் நினைக்கும் முன் ஒரு பெண் பழத்தட்டு ஏந்தி வந்தாள். இன்னொரு பெண் சாமரம் வீசினாள். மற்றொருத்தி கால் பிடித்துவிட்டாள்!

"அடடா...இது காடாயிற்றே...புலி ஏதாவது இங்கு வருமோ?" என்று அவன் நினைத்த அடுத்த கணம் எங்கிருந்தோ ஒரு புலி பாய்ந்து வந்து அவனை அடித்துக் கொன்றுவிட்டது!

நிஜ வாழ்க்கையும் இந்தக் கதை மாதிரிதான். உங்கள் மனம் கற்பகத் தரு. உங்களுடைய எண்ணங்களே வாழ்க்கையை வடிவமைக்கிறது. அது நரகத்தையும் படைக்கும், சொர்க்கத்தையும் படைக்கும். இன்பம், துன்பம் இவற்றைப் படைப்பது உங்கள் எண்ணங்களே. மகிழ்ச்சி, துயரம் எல்லாம் மாயைதான். நம்மால் படைக்கப்பட்ட மாயைகள்.

உங்களைச் சுற்றி வேலியிட்டுக் கொள்வது, சுவர் எழுப்பிக் கொள்வது எல்லாமே நீங்கள்தாம். உங்களுடைய முழு வாழ்க்கையும் நீங்கள் உருவாக்கிக் கொண்டதுதான். உங்களைத் தவிர உங்களை வதைப்பவர் யாரும் இல்லை. இதை மட்டும் நீங்கள் புரிந்து கொண்டால் நரகத்தைச் சொர்க்கமாக மாற்றிவிட முடியும்.

**("ஜென் தியான முறைகள்" என்ற புத்தகத்தில்)**

தனக்கென வீட்டை அமைத்துக் கொண்டு மனைவி மக்களோடு வாழ்ந்து பல நாள் உணவுக்கு வேண்டுமென்று சேமித்தல் இல்வாழ்வான் செயல். எந்த வகையிலும் பற்றில்லாத துறவியர் உணவு பற்றிய கவலையே இன்றி வாழவேண்டும். பிச்சை எடுத்து உண்ண வேண்டும். எப்படிப் பிச்சை எடுக்க வேண்டும் என்பதை வண்டுகள் தத்தாத்தரேயருக்கு உபதேசித்தன.

ஒரு வண்டு காலையில் மலர்ந்திருந்த ஒரு மலரிலே சென்று தேன் உண்டது. உடனே அங்கிருந்து பறந்து மற்றொரு மலரில் சிறிது தேனை உண்டது. இப்படிச் சிறிது சிறிதாகப் பல மலர்களிலே சென்று தேன் நுகர்ந்து ரீங்காரம் செய்து கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு பறப்பதை முனிவர் கண்டார். "ஆகா! எத்தனை அழகியது இதன் செயல்! உணவு பற்றிக் கூட ஓர் இடத்தில் பற்றின்றி வாழும் இந்த வாழ்வல்லவா துறவு வாழ்க்கை?" என்று எண்ணினார். நாமும் இப்படியே நகரின் ஒவ்வொரு மனைக்கும் சென்று கரதலமே (கரங்களையே) பாத்திரமாகப் பிட்சையேற்று வாழ்வது இன்ப நெறி என்று கண்டு அவ்வாறே செய்யப் புகுந்தார். தேனுண்ணும் இதனை "மதுகரபிட்சை" என்பர். மதுகரம் என்பது வண்டுக்குப் பெயர்.

பிட்சை இவ்வாறு ஏற்கவேண்டும் என்பதை ஒரு வண்டு உபதேசம் செய்ய, மற்றொரு வண்டு எவ்வாறு ஏற்றல் கூடாதென்பதையும் உபதேசித்ததாம்.

ஒரு நாள் ஒரு தாமரை மலரில் உள்ள தேனுக்கு ஆசைப்பட்ட வண்டு அதில் புகுந்து தேனை உண்ணத் தொடங்கியது. அந்தத் தாமரையிலே பற்றுக் கொண்டு நாள் முழுவதும் தங்கி தேனை உண்டு மயங்கியது. மாலைக் காலம் வரவே தாமரை மலர் குவிந்தது. அதன் இதழ்கள் நெருக்க நெருக்க உள்ளே இருந்த வண்டு மூச்சு விடவும் முடியாமல் இறந்துவிட்டது. மறுநாள் தாமரை மலர் விரிந்தபோது வண்டின் ஒலியில்லை; உயிரற்று கிடந்தது. முனிவர் பார்த்தார். "ஒரு வீட்டில் தங்கிச் சுவையுள்ள உணவு கிடைக்கிறது என்று இருந்து அருந்தினால் உலகத்துப் பாசம் நம்மை இப்படித்தான் அழுத்திக் கொன்றுவிடும்" என்று தெரிந்து கொண்டார்!

**('பேசாத பேச்சு' என்ற நூலில் கி.வா.ஜகந்நாதன்)**



# தேனுண்ணும் வண்டு...!

# ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கை ஒன்றே முக்கால் இலட்சம்! தமிழில்?

மொழியைப் பற்றியோ அல்லது கலை, கலாசார விஷயங்களைப் பற்றியோ குறிப்பான ஒரு விஷயத்தை ஆய்வு செய்ய வேண்டுமானால் அது தொடர்பாக வெளியாகியிருக்கும் ஆய்வுகள் அல்லது புத்தகங்களை படிக்க வேண்டும். ஆராய்ச்சி பரவலானதாக, பெரிதாக இருக்குமானால் ஒரு குழுவே சேர்ந்து பல புத்தகங்களைப் படிக்கலாம். ஆனால் எவ்வளவு காலம், எவ்வளவு பேர் சேர்ந்தாலும் எழுத்தின் சரித்திரத்தில் வெளியான எல்லா புத்தகங்களையும் சேர்த்துப் படித்துவிட முடியுமா... அல்லது பார்க்கத்தான் முடியுமா...

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சு யந்திரத்தைக் கண்டுபிடித்தது முதல் இன்றுவரை வெளியாகியுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை பதின்மூன்று கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதுவும் அண்ணளவான ஒரு கணக்குதான். இவற்றையெல்லாம் படிக்க முடியவில்லை என்றாலும், சிறிதளவு பார்க்கவாவது சாத்தியம் இருக்கிறது - கூகுள் உதவியால்.

ஒன்பது வருடங்களுக்கு முன்பு கூகுள் ஒரு வேலையைத் தொடங்கியது. புத்தகங்களை டிஜிட்டல் மயமாக்குவது என்று கூகுள் தீர்மானித்தபோது, வெளியீட்டாளர்களுக்கு பயங்கர எரிச்சல். புத்தக விற்பனை பற்றிய கவலை வெளியீட்டாளர்களுக்கு மட்டுமல்ல, எழுத்தாளர்களுக்கும் காப்புரிமை பிரச்சினை எழுந்தது. எழுத்து மட்டுமே தொழில் என்று இருப்பவர்களுக்கு காப்புரிமை மிக முக்கியமான பிரச்சினைதான்.

கூகுள் ஒரு சமரசத்துக்குத் தயாரானது. காப்புரிமை தொந்தரவில்லாத புத்தகங்களை மட்டும் முழுமையாக டிஜிட்டல் தேடலில் நாம் படிக்கும் விதமாக அளித்தது. பிற புத்தகங்களை முற்றிலும் ஸ்கான் செய்து தனது ஆவணங்களிலும் வைத்திருந்தாலும் கூட, சில முக்கிய பகுதிகளை மட்டுமே வாசகர் காண முடியும் என்ற நிலைக்கு கூகுள் இறங்கி வந்தது.

இந்தத் திட்டத்தில் உலகின் முன்னணி பல்கலைக்கழகங்கள் சேர்ந்துகொண்டன. பல எதிர்ப்புகளும் வழக்குகளும் தொடர்கின்றன.

2004ஆம் ஆண்டு புத்தகங்களை ஸ்கான் செய்யத் தொடங்கிய கூகுள் 2010ஆம் ஆண்டு வரை சுமார் ஒன்றரை கோடி புத்தகங்களை "டிஜிட்டைஸ்" செய்திருக்கிறது. இன்னும் அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. இவற்றில் மிகப் பெரும்பான்மையானவை ஆங்கிலப் புத்தகங்கள் என்பதையும் சொல்லத்தான் வேண்டும்.

மேற்படி சர்ச்சைகள், கூகுள் புக்ஸ் திட்டத்தில் பல குறைகள் என்கிற புகார்கள் இவையெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். கூகுள் ஸ்கான் செய்து வைத்த புத்தகங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு சிலர் வெவ்வேறு ஆராய்ச்சிகளில் இறங்கினர்.

உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழக பண்டிதர்கள் சிலர் ஆங்கில மொழி ஆராய்ச்சியில் இறங்கினர். முழுமையான விவரங்கள் இருக்கும் ரகமாக ஐம்பது இலட்சம் புத்தகங்களை அவர்கள் தனியே பிரித்தார்கள். அதிலும் 1800ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை வெளியான ஆங்கிலப் புத்தகங்களை மட்டும் தனியே பிரித்தார்கள்.

ஒரு ஃபோர்முலா வகுத்து ஆங்கிலத்தில் உள்ள சொற்களின் எண்ணிக்கையை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். இந்த ஃபோர்முலாவின் முக்கிய அம்சங்களில் ஒன்று: ஒரு சொல் கொண்ட வார்த்தைகள், பல சொல் கொண்ட வார்த்தைகளை அடையாளம் கண்டுபிடிப்பது. எந்த விதமான சொல் தொடர்களை ஒரு சொல்லாக அங்கீகரித்து சொல் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளலாம் என்பது ஒரு சவால்தான்.

ஒற்றைச் சொல் வார்த்தைகள் போலவே ஐக்கிய நாடுகள் போன்ற இரட்டைச் சொல் தொடர்கள் கூட ஒரு சொல் போலவே பயன்படுத்தப்படுவதும் சகஜமான விஷயம் என்பதால் அதுபோன்ற இரு சொல் வார்த்தைகளையும் வகை வகையாகப் பிரித்து எண்ணினார்கள்.

ஆங்கிலத்தில் உள்ள அரிதான ஐந்து சொல் வார்த்தைகள் (தி யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒஃப் அமெரிக்கா) எல்லாவற்றையும் கூட கவனமாக கணக்கிட்டார்கள்.

இந்த வகையில் எண்ணி முடித்தபோது, ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் பத்து இலட்சம் சொற்கள் உள்ளன என்ற முடிவுக்கு வந்தார்கள் அந்த ஹார்வர்ட் பண்டிதர்கள்.


ஆங்கில அகராதிகளில் முன்னணியில் உள்ள ஒக்ஸ்ஃபோர்ட் அகராதியில் அதாவது முழுமையான அகராதியில் சுமார் ஏழரை இலட்சம் ஆங்கில சொற்கள் உள்ளன. இவை தவிர 47 ஆயிரத்துக்கும் அதிகமான வழக்கொழிந்த அல்லது பரவலாக பயன்படுத்தப்படாத சொற்கள் வேறு. இதையெல்லாம் தொகுத்ததில் 20 தொகுதிகள் நிறைந்துவிட்டன. இது முழு ஒக்ஸ்ஃபோர்ட் அகராதியின் இரண்டாம் பதிப்பு - 1989இல் வெளியா கியது. (இதனை பிரத்தியேகமாக விண்ணப்பித்துதான் வாங்க வேண்டும். ஒன்றரை இலட்சம் ரூபா செலவாகும். வெளியான முதல் பத்து வருஷங்களில் முப்பதாயிரம் பிரதிகள் விற்றன. வருஷ சந்தா கட்டி ஒன்லைனிலும் பார்த்துக் கொள்ளலாம். பல்வேறு சுருக்கிய வடிவ ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதிகள் இருக்கின்றன. இவை கோடிக்கணக்கான பிரதிகள் விற்றுள்ளன என்பது வேறு விஷயம்.)



அறிவியல் சொற்கள், சில வகை சிறப்பு பயன்பாடுகள் எல்லாவற்றையும் கணக்கிட்டால், எப்போதும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்துவரும் ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கை ஒன்றே முக்கால் இலட்சம் என கணக்கிட்டுள்ளார்கள்.

ஒக்ஸ்ஃபோர்ட் இங்கிலீஷ் அகராதி இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில்தான் வேகமாக வளர்ச்சி கண்டது. 1950ஆம் ஆண்டிலிருந்துதான் இப்போதுள்ள அளவில் 70 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளது. மூன்றாம் பதிப்பு வேலை நடைபெற்று வருகிறது.

தமிழில் இது போன்ற ஒரு சொல் ஆராய்ச்சி நடக்குமா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். காத்திருப்போம்.


சிவபூமி மடம்




நகுலேஸ்வரத்திலுள்ள சிறாப்பர் மடம் (பாழடைந்த நிலையில்)

## வரலாற்றுச் சிறப்பு மிக்க

# நகுலேஸ்வர கிராமமும் அதன் உட்கட்டுமானமும்

யாழ். மாவட்டத்திலே வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே வட மெற்குத் திசையில் ஜே.226 கிராம சேவையாளர் பிரிவில் நகுலேஸ்வரம் கிராமம் உள்ளது. இக்கிராம சேவையாளர் பிரிவு 099ஙஅற பரப்பளவைக் கொண்டது. வலி.வடக்கு பிரதேசசெயலகத்தில் இருந்து 18 கிலோமீற்றர் தூரத்திலே இப்பிரதேசம் அமைந்துள்ளது. இதில் 04 உட்கிராமங்களும் உள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயத்தைத் தன்னத்தே கொண்டு பல வளிகளில் சிறப்புற்றுவருகின்றது. சிறப்பான கிராம சேவையாளரின் செயற்பாட்டால் இம் மக்கள் பல அரச உதவிகளைப் பெற்று மீள்குடியேற்



முகம் மாறிய சிலை

றத்தை முன்னெடுத்து வருகின்றனர். செல்வி தம்பிநாயகம் நாககசுபதினி எனும் கிராம செயலாளரின் மக்கள் மயமாதல் சேவை பாராட்டுதற்குரியது.

### ஆலயச்சிறப்பு

கீரீமலை நகுலேஸ்வரம் பஞ்ச ஈஸ்வரங்களின் இதயஸ்தான மாக விளங்குகின்றது. இது 5000 ஆண்டுகளிற்கு முற்பட்ட இதிகாச புராண சான்றுகளைக் கொண்டுள்ளது. நகுலகிரிப்புராணம் என்பது இக் கோவிலின் தல புராணமாகும் கிருதயுகத்திலே கீரி முகமுடைய நகுலமுனிவர் இத் தீர்த்தத்தில் தீர்த்த மாடிய போது அவரது கீரிமுகம் மாறியதாகவும் இறைவன் இவ ரிற்கு தரிசனம் கொடுத்தமையால் இங்கிருந்த மலையின் குகை யிலே நெடுக்காலம் இவர் வாழ்ந்து வந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இதனாலே கீரிமலை எனும் பெயர் உருவானது.

சோழ நாட்டு இழவரசியான மாருதப்புரவீக வல்லி "குன்ம" நோயினால் பாதிக்கப்பட்டு துதெ்து நகுலமுனிவரை நாடிய போது அவரின் வேண்டு கோளிற்கு இணங்க இதில் தீர்த்த மாடியமையால் அவளின் "குன்ம" நேயும நீங் கப்பெற்று குதிரை முகமும் மாறியது. இதன் நினைவாகவே மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தைக் கட்டுவித்தான என இவ் ஆலய வரலாற்று கூறுகின்றது.


காசிவிசுவநாதர்கோவில்

### கிராம அபிவிருத்தி


நகுலேஸ்வரம் முன்பள்ளியும் பொது நோக்கு மண்டபமும் JSAC நிறுவனத்தினால் 1367760 ரூபா மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது முன்பள்ளி இயங்கி வருகின்றது. கிராம மக்களின் பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் இங்கு காலத்திற்குக் காலம் இடம்பெற்று வருகின்றது. 2011ஆம் ஆண்டு "கருகம்பனைவாழ் மக்கள் ஒன்றியம் கனடாவில் இருந்து அனுப்பிய நிதியால் சனசமூக நிலையம் திருத்தம் செய்யப்பட்டு தமிழ் மன்ற சன சமூக நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டு நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கருகம்பனை ப.நோ.கூ. சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

### சமூகமட்ட அமைப்பு

2011ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்பின் நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச்சங்கம் உருவாக்கப்பட்டது. இச் சங்க ஒன்றுளைவுடன் மக்கள் கிராம அபிவிருத்திகளை பலவாறு முன்னெடுத்தனர். இதனை விட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்னெடுத்த 2012 மகளீர்தின நிகழ்வு பிரதேச செயலக மட்டப்போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதனைவிட விவசாய சம்மேளனம் 2011ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய் யப்பட்டது. இதனூடாக FAO நிறுன உதவியுடன் அங்கத்தவர்களுக்கு குரக்கன், பயறு, சின்னவெங்காய விதையினங்களும், பப்பாசி போன்றனவும் வளங்கப் பட்டு வருகின்றது.

இதுதவிர கீரிமலை இந்து மயானம், யாழ்.கீரிமலை நகுலேஸ்வரா ம.வி. பாடசாலை என்பன உள்ளடங்கலான தனித்தன்மைபெற்ற தன்னிகரற்ற கிராமமாக இது விளங்கிவருகின்றது. இக்கிராமம் உயரவேண்டும். கிராமந்தோறும் உள்ள தனிச்சிறப்பு போற்றப்பட வேணடும். என்பதற்காகவே வாரமொருகிராமம் உங்களைத் தேடிவருகின்றது.


குழந்தைவேல் சமாதி


அந்தியெட்டி மடம்

# கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு



கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ (புறநெகும) வீதி புனரமைப்பு மற்றும் மக்களுக்கு அத்தியாவசியமான கட்டடத்தொகுதிகள் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) அனுமதியினை வழங்கிவைத்தார்.

கரவெட்டி பிரதேசசபைக்குரிய 13500 சதுர அடி நீளமுள்ள கடைகளுடன் கூடிய சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு 65 மில்லியன் ரூபாவும், நுகர்வில் வாய்க்கால் 500 மீற்றர் புனரமைக்க 4.30 மில்லியன் ரூபா நிதியினையும் பருத்தித்துறை பிரதேச சபைக்குரிய 3 கிலோ மீற்றர் நீளமுடைய முள்ளியான் பகுதியில் கட்டைக்காடு நித்திய வெட்டை வீதியும் நாகர்கோவில் கிழக்கு பகுதியில் சவேரியார் கோவில் வீதி (சேச்வீதி) ஆகிய வீதிகளும் புனரமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நல்லூர் பிரதேச சபைக்குரிய கொக்குவில் பகுதியிலுள்ள நாமகள் வீதியும் அரியாலை கிழக்கு பகுதியில் கொட்டுக்கிணறு பிள்ளையார் கோவில் வீதி, அரியாலை பகுதியில் மணிப்புரி குறுக்கு வீதித் தொகுதி ஆகியனவும், சாவகச்சேரி நகரசபைக்குரிய சப்பச்சிமாவடி பிள்ளையார் வீதி, நுணாவில் கல்வயல் வீதி 1 ஆம் ஒழுங்கையும் ஆடியம்பிட்டி வீதியும், மாவடிப்பிள்ளையார் வீதி, தாளையடி அம்மன் கோவில் வீதி, 2 ஆம் ஒழுங்கை வங்களா வீதி, வீரபத்திரர் வீதி, முதலியார் வீதி, 4 ஆம் எல்லை வீதி, ஐயனார் வீதி, கிராம்புவில் மேற்கு வீதி, கத்தாப்படி வீதி, ஆகிய வீதிகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் (புறநெகும) மேற்படி அபிவிருத்தித் திடடங்கள் மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அனுமதி வழங்கி வைத்தார்.

# செஞ்சிலுவைச் சங்கத்தால் பயிற்சிப் பாசறைமுகாம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரிவு மற்றும் நெடுந்தீவுப் பிரிவு இளைஞர்களுக்கான பயிற்சிப் பாசறை முகாம் ஒன்று கடந்த மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நெடுந்தீவு செஞ்சிலுவைச்சங்க பிரிவுக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. ஐந்தாம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்த முகாம் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நிறைவு பெற்றது.

இந்த முகாமில் வேலணை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த 30 தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சி, அனர்த்தகாலங்களில் பதிலிறுப்புச் செய்தல், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல், மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பான பயிற்சிகள் வளவாளர்களினால் வழங்கப்பட்டது.




இந்நிகழ்வில் யாழ. கிளைக் குழுவினர் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் மற்றும் கிளை நிர்வாகக் குழுவினர் வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரிவு நிர்வாக குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முதலுதவி வளவாளராக ந.இலங்கேஸ்வரன் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வெள்ளி நற்சிந்தனை...





# “அழுகை பாவங்களை அகற்றும்”

“நான் பொய் ஒழுக்கம் உடையவன்; எனது நெஞ்சமும் வஞ்சகமானது; எனது அன்பும் போலியானது; என்றாலும் இப்படிப்பட்ட தீவினையை உடைய நான் அழுதால் உன்னை அடையலாம்'' என்பது இறைவனை அடைவதற்கு மணிவாசகர் சொல்வதாகும். அடிகளார் சொல்வதைப் பார்த்தால் இறைவனை அடைவதற்கு இது ஒரு எளிய வழியாய் இருக்கிறதாகத் தெரிகிறது.

“யானே பொய் என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய் என்று அடிகளார் சொல்லும் பொழுது தமக்குமுன் திரை போல் ஆண்டவனை மறைத்த ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் தன்னைவிட்டு அகன்றன என்பதனைக் காண்கின்றோம். மும்மலங்களும் நீங்கும் போது மனிதன் மாசற்றவனாகத் திகழ்கின்றான். கறைபட்ட மனம் கண்ணீரால் கழுவப்பட்டுத் தூய்மை அடைந்து, நல்ல கண்ணாடியில் காண்பது போலத் தன்மனக் கண்ணில், தன் உண்மைச் சாயலையும், இறைவடிவையும் காண்கின்றான். மனம் மாசு படிந்திருப்பதைத்தான் பாவம் நிறைந்த உள்ளம் என்று வேறுவிதமாகச் சொல்கிறார்கள். பாவத்திற்குச் சரியான இலக்கணம் கூறுவது சிறிது கடினம்தான். ஏனெனில் ஒரு சாரார் பாவம் என்று கருதுவதை இன்னொரு சாரார் பாவம் என்று கருதுவதில்லை! அதைப் புண் ணியம் என்றுகூடச் சொல்லுவார்கள். நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு, பாவத்தின் இலக்கணம் வித்தியாசமாகத்தான் இருக்கும் என்றாலும், கடவுள் நம்பிக்கை உள்ள எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டிய இலக்கணம் ஒன்று உண்டு. எந்தக் காரியங்கள் இறைவனை நாம் அணுக விடாது தடுக்கின்றனவோ, அவைகளெல்லாம் பாவம் என்பதாகும். ஆகவே பாவத்தையும், மும்மலங்களையும் அகற்றுவதற்கு அழுகை தேவையென்று மணிவாசகன் திட்டவட்டமாகத் தெளிந்து “அழுவதால் உனைப் பெறலாமே? என்று உருக்கமாகப் பாடியுள்ளார்.

மேலே குறிப்பிட்டுள்ளதைப் பார்த்துச் சிலர் மனதில், என்ன இது! அவ்வளவு எளிய முறையாகத் தோன்றவில்லையே? என்று ஐயப்படலாம். ஞானம், யோகம், கருமம் என்று சொல்லப்படுகின்ற வழிகளைவிட இது இறைவனை அடைவதற்கு எளிய வழியென்று அநுபூதிமான்கள் சொல்லியிருக்கின்றனர்.

உண்மையான அழுகைக்கு எல்லாச் சமயங்களிலும் சமய குரவர்கள் தனிச் சிறப்பிடம் அளித்திருக்கின்றார்கள். குறிப்பாகக் கிறிஸ்தவ சமயத்தில் ஒரு பாவி தன் பாவத்தை நினைந்து அழுவானேயானால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டு இறைநிழலில் வாழ்கின்றான் என்பது அவர்களுடைய சித்தாந்தம்.

எனவே அரிய மானிடப் பிறப்பு மேன்மையை இறைவனைக கசிந்து உருகிக் கண்ணீர் மல்க அழைப்போம்.

சொல்லின் செல்வர்,
இரா. செல்வவடிவேல்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு பாத்திரத்தை உருவாக்கும்போது அதற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கத்தக்க ஒரு மனிதரை வழக்கமாகத் தேடுவதுண்டு. அந்த மனிதர் என் மனத்துக்குள் இருந்தால், அந்தப் பாத்திரத்தை நம்பத்தக்க வகையில் படைப்பது எனக்கு எளிதாக இருக்கிறது. மக்கள் பல்வேறு சிக்கல்களும் தீர்வற்ற குழப்பங்களும் நிறைந்த கூட்டு முழுமையாக இருக்கின்றனர். அவர்களுடைய ஆளுமையின் அனைத்துப் பண்புக்கூறுகளையும் ஒருசேர மிக அரிதாகத்தான் வெளிக்காட்டுகிறார்கள். பாத்திரங்களிலும் அப்படியேதான் அமைக்கப்படவேண்டும். பாத்திரங்கள் அவரவர் முழு வாழ்க்கையையும் வாழ படைப்புக்குள் நான் அனுமதிக்கிறேன். நான் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லையென்ற உணர்வு அடிக்கடி எனக்குள் தோன்றுகிறது. கதை எதிர்பாராத திசைகளில் இழுத்துச்செல்கிறது. இங்கே என்னுடைய பணி என்பது அதை அப்படியே எழுதிச் செல்வதுதானே தவிர ஏற்கனவே நான் திட்டமிட்டிருந்த வட்டத்துக்குள் திணிப்பதல்ல.

– இசபெல் அலெண்டே

ராஜு முருகனது கணிசமான கட்டுரைகள் தோல்வியுற்ற சீரழிந்த மனிதர்களைப் பற்றியது; ஆனால் அவர் சீரழிவின் ஆன்மீகத் தளத்தையோ உளவியலையோ தொடுவதில்லை. லௌகீக தோல்விகள். அவற்றின் பின்னுள்ள ஒழுக்கம். இழந்த கனவுகளின் நடைமுறை வருத்தம். அதுதான் அவர் திரும்பத் திரும்ப பேசுவது. இது நமக்கு ஏன் பிடித்திருக்கிறது என யோசித்தேன். ஒன்று, முப்பது நாற்பதுகளில் உள்ள பலரும் பற்பல சமரசங்கள், இயலாமைகளுடன் வாழ்பவர்கள். ஏதோ ஒரு வேலை, குடும்பம் என சமூக கட்டமைப்பில் அங்காங்கே ஒட்டிக் கொண்டிருப்பவர்கள். எல்லோருக்கும் தாம் வாழ்வில் வேறு ஒருவராக இருந்திருக்கலாம் என்கிற ஏக்கமும் பச்சாதாபமும் இருக்கிறது. இந்த பச்சாதாபத்தை தான் ராஜு முருகன் தூண்டுகிறார். படித்ததும் கண்ணீர் விட்டு ச்சே நானும் இப்படித்தான் சீரழிந்து போனேன் என நினைத்துக் கொள்கிறோம். இது சுரண்டல் எழுத்து. ஏனெனில் முருகன் உங்கள் பிரச்சினைகளுக்கான விடை தேடுவதில்லை, காரணத்தை அலசுவதில்லை. அவர் உங்களது முரடு தட்டிப்போன புண்ணில் ஊசி கொண்டு குத்தி துளி ரத்தம் வரவழைக்கிறார். அவ்வளவுதான்.

– ஆர்.அபிலாஷ்

இந்திரா பார்த்தசாரதியின் கதை மாந்தர்கள் பலர் கோழைகளாக இருப்பார்கள். உண்மையைச் சந்திக்கத் தயங்குவார்கள். அவர்கள் பேச்சில் cynicism நிறைய இருக்கும். பார்த்தசாரதியின் உரைநடையில் சம்பாஷணைகள் மிக அழுத்தமாக இருக்கும். வருணனைகளில் சற்று அவசரம் காட்டி விட்டுச் சீக்கிரமே உரையாடலுக்குள் நுழைந்து விடுவார். எல்லாப் பாத்திரங்களுக்குள்ளும் பார்த்தசாரதி கொஞ்சம் இருப்பார். நம் தின வாழ்க்கையில் ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொள்வதிலும் பழகிக்கொள்வதிலும் உள்ள பாசாங்குகளையும் மெலிதான அபத்தங்களையும் மிகத் திறமையாகச் சுட்டிக் காட்டக் கூடியவர்.

– சுஜாதா

மரணத்தின் பிரமாண்டம், வாழ்வின் நிர்ணயிக்க முடியாத தன்மை ஆகியவற்றின் பின்னணியில் மனித மனம் அன்பிலும் காதலிலும் ஒருவித நிரந்தரத் தன்மையைக் கண்டடையத் துடிப்பதை மௌனியின் கதைகள் பொதுவான கருவாகக் கொண்டுள்ளன.

– ஜெயமோகன்

என்னைப் பொறுத்தவரையில் ஜெயமோகன் எழுதும் இலக்கியம் குறித்த கட்டுரைகள் அவரது புனைகதைகளை விட முக்கியமானவை என்பேன். அவரளவிற்கு நுணுகி ஆராய்ந்து இலக்கியத்தின் அழகியல் கூறுகளையும் இலக்கிய நுட்பங்களையும் இலக்கியங்களின் செல்நெறியையும் எழுதிய இன்னொரு ஆளுமை தமிழில் கிடையாது. மனிதர்களை அவதானிப்பதில் அவர் ‘எந்திரன்’ போலயிருக்கிறார். கிடைக்கும் ஒர் இடைவெளியில் வித்தியாசம் வித்தியாசமான மனிதர்கள் குறித்துப் பலவற்றைக் கிரகித்துவிடுகிறார். “பொதுவாக ஊர்ச் சண்டியர்களிடம் ஒரு சிறிய உடல் ஊனம் இருக்கும்” என்று ஒருமுறை எழுதியிருப்பார்... அது கல்வெட்டு. இந்த நுட்பமான பார்வைதான் இலக்கிய அழகியலின் அடிப்படை.

– ஷோபா சக்தி

என்னிடம், உலகில் ஒருவரை மட்டுமே உயிர்ப்பிக்க வைக்க முடியும். நீங்கள் யாரை விரும்புகிறீர்கள் எனக் கடவுள், உலகம அழியும் நாளில் கேட்டால், நான் ஷேக்ஸ்பியரையே உயிர்ப்பிக்கக் கோருவேன். எனில், ஷேக்ஸ்பியரே பின் இந்த முழு இயக்கத்தையும் உருவாக்கி விடுவாரே!

– ஜோர்ஜ் லூயி போர்ஷே

# தேசிய பாடசாலை ஆசிரிய வெற்றிடம்; விரைவில் பட்டதாரிகளுக்கு நியமனம்



(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப விரைவில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த மாதம் 12ஆம் திகதி, ஆசிரிய நியமனத்திற்கான விண்ணப்பங்கள் வர்த்தகமானி மூலம் கோரப்பட்டன. இதற்கமைய பெரும் எண்ணிக்கையிலானோர் விண்ணப்பித்துள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு, தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்கு முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் இல்லாமை பாரிய குறைபாடாகவே காணப்படுகிறது. இதைத் தொடரவிடமுடியாது. நாட்டின் கல்வி முறையில் படிப்படியாக சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் தொழில்நுட்ப பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க முன்வந்த போதிலும், 600 பேர் மாத்திரமே தகுதியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். தொடர்ந்தும் 400 பேருக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆயிரம் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எனினும் 58 ஆங்கிலப் பட்டதாரிகளிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 40 வீதமாகவும், வணிகத்துறையில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 37 வீதமாகவும், கலைத்துறையைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 25 வீதமாகவும் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கல்வியமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

# தமிழ்மொழிப் பயிற்சி பூர்த்தி 25 பிக்குகளுக்கு சான்றிதழ்



இலங்கை கல்வி அமைச்சின் பிரிவேனாக் கிளையினால் நடாத்தப்பட்ட வெளிக்கள தமிழ் மொழிப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த தென்னிலங்கையைச் சேர்ந்த இருபத்தைந்து பிக்குகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்விற்கு கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார்.

தேசியக் கொடியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றி வைக்க, கல்வியியற் கல்லூரி மாணவிகள் தேசிய கீதம் பாடினர். இந் நிகழ்வில் அகில இலங்கை பிரிவேனா கல்விப் பிரிவின் தமிழ்மொழி ஆலோசகர் உயங்காவே ஞானரத்னதேரர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 51ஆது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் பர்ணாந்து, விஷேட அதிரடிப்படை பொலிஸாரின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி வாஸ்பெரேரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திலகரட்ண, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், முன்னாள் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# முதலீட்டை ஊக்குவிக்க 3 புதிய நிலையங்கள்

(கொழும்பு)

முதலீட்டை ஊக்குவித்து பலப்படுத்த புதிய வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 3 நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதையடுத்து முதலீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது பல்வேறு முதலீடுகளுக்காக முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தாய்வான், நெதர்லாந்து, அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வத்துடன் காணப்படுகின்றனர். அவர்கள் தமது விண்ணப்பங்களை முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை இலங்கையின் தைத்த ஆடைகளுக்கு சர்வதேச நாடுகளில் கூடுதலான கேள்வி ஏற்பட்டுள்ளது. எனினும் ஆடைத் தொழிற்சாலைகள் ஊழியர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளன.

இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக செல்வதே இதன் காரணமென முதலீட்டு ஊக்கு விப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# நிலுவை செலுத்தத் தவறியோரின் மின் இணைப்புகள் துண்டிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய நிலுவைக் கட்டணங்களை செலுத்தத் தவறிய 950 மின் பாவனையாளர்களின் மின் இணைப்புக்களை தற்போது துண்டித்து வருவதாக மன்னார் மாவட்ட மின்சார சபை மின் அத்தியட்சகர் முஹமட் மிஸ்ரக் தெரிவித்தார்.

இதுவரையில் 550 மின் பாவனையாளர்களின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. மேலும் 400 மின் பாவனையாளர்களின் மின் இணைப்புக்களைத் துண்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.

தற்போது துண்டிக்கப்பட்டுள்ள மின் இணைப்புக்களை மீளப் பெறுவதற்கு மின் பாவனையாளர்கள் தங்களின் நிலுவைகளில் 2 வீதம் தண்டப்பணமும், மீள் இணைப்புத் தொகையாக 800 ரூபாவும் செலுத்த வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சகர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய நிலுவைகளைக் கொண்ட மின் பாவனையாளர்களை உடனடியாக தங்களது மின் பாவனைக்கான கட்டண நிலுவைகளைச் செலுத்தி மின் இணைப்புத் துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இதற்கான கால அவகாசத்தையும் மன்னார் மாவட்ட மின்சார சபை மின் பாவனையாளர்களுக்கு வழங்கியிருந்தது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலமும் அறிவித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் இந்த அறிவித்தல்களையும் மீறி, இறுதி நிலுவைத் தொகை 25,000 ரூபாவிற்கு மேலுள்ள 950 மின் பாவனையாளர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களின் மின் இணைப்புக்கள் தற்போது துண்டிக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சகர் தெரிவித்தார். துண்டிக்கப்பட்ட மின் இணைப்புக்களில் பாடசாலை, வீடுகள், வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

மேலும் எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து 3 மாதங்களுக்கு மேல் நிலுவைத் தொகை செலுத்தாத அனைத்து மின் பாவனையாளர்களின் மின் இணைப்புக்களும் துண்டிக்கப்படும் எனவும் மன்னார் மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சகர் தெரிவித்தார்.

# இறக்குமதியாகும் பால்மாக்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் தரங்கள், பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த் பால்மாக்களில் டி.சி.டி எனப்படும் இரசாயனப் பதார்த்தம் கலக்கப்படவில்லை என உறுதிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே சுகாதார அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இதேவேளை, ஒரு சுகவீனமுற்றவரைத் தங்க வைத்து சிகிச்சையளிப்பதற்கு அரசாங்கத்திற்கு நாளொன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவரை நிதிசெலவீனமாவதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவசர சிகிச்சைப் பிரிவில் ஒருவரை அனுமதித்து சிகிச்சையளிக்கும் போது 10 ஆயிரம் ரூபாவரை செலவிடப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவில் இரசாயனப் பதார்த்தம் கலந்துள்ளதா என்பது தொடர்பில் அறிந்து கொள்வதற்காக சிங்கப்பூரிலிருந்து பெறப்பட்ட அறிக்கையில் திருப்தியின்மை காரணமாக அதன் மாதிரிகளை வேறொரு நாட்டுக்கு அனுப்பிவைக்க தீர்மானித்திருப்பதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரூமி மர்சுக் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இது தொடர்பில் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுக் குழுவுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். பால்மா மாதிரிகள் தொடர்பில் சிங்கப்பூரிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையினை, உணவுக் கட்டுப்பாட்டு குழுவிலுள்ள வைத்தியர்கள் ஆராய்ந்த போதிலும் அதிலுள்ள தகவல்கள் போதாமைகாரணமாக இன்னுமொரு நாட்டிற்கு அதன் மாதிரிகளை அனுப்பி வைக்குமாறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதாகவும் தலைவர் டாக்டர் ரூமி மர்சுக் குறிப்பிடடார்.

# வாக்காளர் பெயர்ப்பட்டியலில் போலித் தகவலை தவிர்க்க ஏற்பாடு

(கொழும்பு)


வா்க்காளர் இடாப்புப் பெயர்ப்பட்டியலில் போலித் தகவல்களை உள்ளீடு செய்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு விடயங்களை அடிப்படையாக வைத்து போலித் தகவல்கள் வழங்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது. இதைத் தடுப்பதற்காக வாக்காளர்களைப் பதிவு செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அனைத்து பிரஜைகளதும் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் தினமாக ஜூன் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு பொதுமக்களை அறிவூட்டும் வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டமாக 10 வாக்காளர் தொகுதிகளில் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இதேவேளை நேற்றுமுன்தினம் முதல் 2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன. கிராம சேவகர்கள், வீடு வீடாகச் சென்று விண்ணப்பப் படிவங்களை வழங்கிவருகின்றனர்.

பொதுமக்கள் அதை உரிய முறையில் பூர்த்தி செய்ய வேண்டும். எதிர்வரும் இரண்டாம் திகதி முதல் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சேகரிக்கப்படும். அதிலுள்ள தகவல்கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்படுமெனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

## பகுதி II


1) 300 g கடலையின் விலை ரூபா 36 எனின் 1 Kg கடலையின் விலை யாது?





2) அருகேயுள்ள முக்கோணத்தின் சுற்றளவுக்குச் சமனான சுற்றளவுடைய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் யாது?

3) ஒரு இனிப்புப்பானப் போத்தல் 5 பேரை உபசரிக்கப் போதுமானதாகும். 18 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

4) பெட்டி ஒன்றில் 416 மாம்பழங்கள் உண்டு. அதனை நான்கு பெட்டிகளில் சமமாக இட்டால் ஒரு பெட்டியில் எத்தனை மாம்பழங்கள் வைக்கலாம்?

5)  அருகிலுள்ள சதுரத்தில் எத்தனை செங்கோணங்கள் உண்டு?

6) கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரம் 25 நிமிடம் பிந்தி ஓடுகிறது. அது சரியாகக் காட்ட வேண்டிய நேரத்தை B யின் முகத்தின் மீது வரைந்து காட்டுக




7) ஒரு தராசின் ஒரு தட்டில் 1 kg படியும், 100g படியும் போடப்பட்டது. மறுதட்டில் பொதி ஒன்றும் 500g படியும் போடப்பட்டது. அப்போது தராசின் இரு தட்டுக்களும் சமநிலையில் காணப்பட்டன. தட்டில் போடப்பட்ட பொதியின் நிறை யாது?

8) $5\frac{1}{2}$ km இல் எத்தனை மீற்றர் உண்டு?

9) 4m நீளமான நாடாவிலிருந்து 1m75 cm நீளமான துண்டு வெட்டியெடுத்தால் மிகுதியாக உள்ளதன் நீளம் யாது?

10) ஒரு பூச்செண்டில் 9 பூக்கள் இருக்குமாறு பூச்செண்டுகள் தயாரிப்பதற்கு 288 பூக்கள் பயன்படுத்தப்பட்டன. தயாரிக்கப்பட்ட பூச்செண்டுகளின் எண்ணிக்கை யாது?

11) பின்வரும் தரவுகளைக் கொண்டு வரைபு தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 2 A | 15 | 08 |
| 3 A | 20 | 11 |
| 4 A | 22 | 22 |
| 5 A | 26 | 16 |

1) சுற்றுலாவிற்குச் சென்ற ஆண்களின் எண்ணிக்கை யாது?

2) கூடுதலான மாணவர்கள் எந்த வகுப்பிலிருந்து சென்றனர்?

3) மிகவும் குறைவான பெண்பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும், கூடுதலான பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

4) 2 A பெண் பிள்ளைகளுக்கு ரூபா 400 இற்கு ஐஸ்கிறீம் கப் கொடுக்கப்பட்டது எனின், ஒரு கப் ஐஸ்கிறீமின் விலை யாது?



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



தமிழ்

ஆசிரியர் :-வ.சிவநேசன் B.A.Dip in Edu, S.L.P.S 2 -II

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

தாவரங்களால் மனிதன் அளவிடற்கரிய பயன்களைப் பெறுகின்றான். விலங்குகளும், பறவைகளும்கூடத் தாவரங்களினாலேயே உயிர் வாழ்கின்றன. நல்ல உணவையும், குளிர்ந்த நிழலையும் தரும் தாவரங்களே மழை வீழ்ச்சிக்கும் உதவுகின்றன. நமது சூழலைச் சுத்தமாக்குவதிலும், மண்ணரிப்பைத் தடுப்பதிலும் தாவரங்கள் வகிக்கும் பங்கு மிகப் பெரியது. சூழலை அழகுபடுத்தும் தாவரங்கள் நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகளாகவும் பயன்படுகின்றன. வீடு கட்டவும், தளபாடங்கள் செய்யவும் தாவரங்கள் உதவுகின்றன. பறவைகள், மிருகங்களின் வாழிடமாகவும், உணவுச்சாலைகளாகவும் விளங்கும் தாவரங்கள் இல்லாது போனால் உலகில் எந்த ஜீவராசிகளும் உயிர் வாழவே முடியாது.

1) “பயன்கள்” என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

2) “அழகு” என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

3) “அளவிடற்கரிய” என்பதன் பொருள் யாது?

இங்கு இடம் பெற்றுள்ள பெயர் அடைமொழிகள் இரண்டை எழுதுக.

4) ______________________

5) ______________________

6) தாவரங்களினால் நமது சுற்றாடலுக்குக் கிடைக்கும் நன்மை ஒன்று எழுதுக.

7) தாவரங்கள் எவற்றின் வாழிடமாக விளங்குகின்றன?

8) பந்தியில் இடம்பெற்றுள்ள பன்மைச்சொல் ஒன்றை எழுதுக.

9) தாவரங்களால் மனிதன் அளவிடற்கரிய பயன்களைப் பெறுகின்றான். இந்த வாக்கியத்தின் எழுவாய்ச் சொல்லை எழுதுக?

10) உணவுச்சாலைகள் என்பதாற் கருதுப்படுவது யாது?

**02) பின்வருவனவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) பெயரெச்சமாக வருவது எது?
   1) செடி 2) விழுந்து 3) அழுத 4) குடித்து

2) வினையெச்சமாக வருவது எது?
   1) பாடிய 2) சித்து 3) வந்த 4) படித்த

3) ஆண்பால் வினைச்சொல்லாக வரக்கூடியது எது?
   1) படித்தாள் 2) கண்ணன் 3) படித்தான் 4) பறந்தது

4) தன்மைப் பெயர்ச்சொல் எது?
   1) நாங்கள் 2) படிப்பேன் 3) அவர்கள் 4) நீ

5) பலர்பால் பெயர்ச்சொல் எது?
   1) பிள்ளைகள் 2) வந்தனர் 3) படித்தாள் 4) பிறந்தன

6) சிறுமி இனிய பாட்டைப் பாடினாள். இவ்வாக்கியத்தில் செயற்படுபொருள் அடைமொழி எது?
   1) சிறுமி 2) இனிய 3) பாட்டை 4) பாடினாள்

7) கீழே உள்ள வாக்கியங்களில் எழுத்துப்பிழை இல்லாத வாக்கியம் எது?
   1) தம்பி வாலைப்பழம் சாப்பிட்டான் 2) நாய்களுக்கு வாள் உண்டு
   3) சூழல் மாசடையாது பாதுகாப்போம் 4) இளைகள் மரத்தில் இருந்தன.

8) எதிர்கால முன்னிலை வினைச்சொல்
   1) வந்தீர்கள் 2) வருவீர்கள் 3) வருகின்றீர்கள் 4) வருவேன்

9) பால் காட்டாத சொல் எது?
   1) குமார் 2) கமலா 3) வீரன் 4) நோயாளி

10) எதிர்ப்பொருள் இணைமொழி எது?
   1) ஏற்ற இறக்கம் 2) அக்கம் பக்கம் 3) பட்டம் பதவி 4) கண்ணும் கருத்தும்

**03) பின்வருவனவற்றால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.**

1) எடுப்பார் கைப்பிள்ளை போல... ------------------------------
2) ஓடும் புளியம்பழமும் போல.... ------------------------------
3) ஆழமறியாமல் காலை விடாதே... ------------------------------
4) நீர்க்குமிழி போல ... ------------------------------
5) சாண் ஏற முழம் சறுக்கும்... ------------------------------

**04) எதிர்க்கருத்துச் சொற்கள் தருக.**

1) அன்னை ---------------------- 2) இருட்டு ----------------------
3) அலங்காரம் ---------------------- 4) இயற்கை ----------------------

**05) "எங்கள் ஊரில் நீண்ட நாட்களாக மழை பெய்யவில்லை..." எனும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**



# கணிதம்

**01) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

1) ஐம்பதாயிரத்து முந்நூற்று ஐந்து என்பதை எண் குறியில் எழுதினால்
   1) 50350 2) 50305 3) 50035 4) 53050

2) 10.000 இலும் 10 குறைந்த எண்
   1) 9990 2) 9090 3) 99990 4) 90090

3) 16 ஐ உரோமன் எண் குறியீட்டில் எழுதினால்
   1) VIX 2) XIV 3) XVI 4) IVX

4) 0.8 ஐச் சாதாரண பின்னமாக மாற்றும்போது பெறப்படாதது
   1) $\frac{8}{100}$ 2) $\frac{8}{10}$ 3) $\frac{4}{5}$ 4) $\frac{16}{1200}$

5) வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடைப்பட்ட திசையின் பெயர்
   1) அக்கினி 2) நிருதி 3) வாயு 4) ஈசானம்

6) $\frac{7}{8} - \frac{3}{4}$ இன் பெறுமதி யாது?
   1) $\frac{4}{4}$ 2) $\frac{1}{8}$ 3) $\frac{3}{8}$ 4) $\frac{73}{84}$

7) 2.5 + 1/2 இன் விடை
   1) 3 2) $3\frac{1}{5}$ 3) $5\frac{1}{2}$ 4) $4\frac{1}{2}$

8) கீழே தரப்பட்ட எண்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண்

| | |
|---|---|
| 1 | 4 |
| 12 | 7 |

| | |
|---|---|
| 1 | 5 |
| 12 | 6 |

| | |
|---|---|
| | 5 |
| 17 | 9 |

   1) 17 2) 3 3) 34 4) 12

9) ஒரு விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பத்துச் சிறுவர்கள் பத்து மாம்பழங்களைச் சாப்பிட பத்து நிமிடங்களாகின்றன. 50 சிறுவர்கள் 50 மாம்பழங்களைச் சாப்பிட எடுக்கும் நேரம்
   1) 5 நிமிடம் 2) 10 நிமிடம் 3) 50 நிமிடம் 4) 100 நிமிடம்

10) படசர = 9531 சபதப = 3929 ரடதம = ?
   வினாக்குறிக்குரிய இடத்தில் வரவேண்டிய விடை
   1) 9563 2) 1526 3) 1529 4) 9251

# ஊழலை ஒழிக்கும் முயற்சியில் மத்திய அரசு மெத்தனப் போக்கு

## மக்களிடம் அதிருப்தி என்கிறார் அந்தோனி



(புதுடில்லி)

ஊழலை ஒழிக்க, மத்திய அரசு, போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கருத்து, மக்களிடையே நிலவுகிறது, என, இராணுவ அமைச்சர், அந்தோனி கூறினார். டில்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், இராணுவ அமைச்சரும், காங்கிரஸ், மூத்த தலைவருமான, அந்தோனி கூறியதாவது,

இந்தியச் செய்திகள்

இரகசியங்கள் உடையும் ஊழலை ஒழிப்பதற்காக, மத்திய அரசு, பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தியதே, இதற்கு சிறந்த உதாரணம். ஆனாலும், ஊழலை கட்டுப்படுத்த, அரசு தரப்பில், போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என, மக்களிடையே கருத்து நிலவுகிறது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம், இன்னும் துவக்க நிலையில் தான் உள்ளது.

அடுத்த சில ஆண்டுகளில், இது, முழு அளவில் நடைமுறைப் படுத்தப்படும். அப்போது, அனைத்து இரகசியங்களும் உடைந்து, தூள் தூளாக சிதறி விடும்.

அலட்சியப்படுத்தமாட்டோம்

எந்த ஒரு நிறுவனமும், தன் தவறுகளை, இரகசியமாக வைக்க முடியாது. அனைத்து விடயங்களும், மக்களுக்கு தெரிந்து விடும். ஊழலை, முழு அளவில் ஒழிக்க, தகவல் பெறும் உரிமைச் சட்டம், பெரிதும் உதவும்.

ஊழல் குறித்து, எப்போதெல்லாம் அரசுக்கு புகார்கள் வருகின்றனவோ, அப்போதெல்லாம், அந்தப் புகார்கள் குறித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எந்தப் புகாரையும், அரசு, அலட்சியப்படுத்தியது இல்லை. இவ்வாறு, அந்தோனி கூறினார்.

# சி.பி.ஐ.யை தவறாக பயன்படுத்தும் காங்கிரஸ்


## அருன்ஜெட்லி குற்றச்சாட்டு

பாரதிய ஜனதா தலைவர்களுக்கு எதிராக சி.பி.ஐ.யை காங்கிரஸ் தவறாகப் பயன்படுத்துவதாக அருண் ஜெட்லி குற்றம் சாட்டியுள்ளார்.

டில்லியில் பேசிய அவர், குஜராத் என்கவுண்ட்டர் தொடர்பாக ராஜஸ்தான் முன்னாள் அமைச்சர் கட்டாரியா மீது சி.பி.ஐ குற்றப்பதிவுத் தாக்கல் செய்திருப்பதற்கு கண்டனம் தெரிவித்தார்

காங்கிரசின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து சி.பி.ஐ செயற்படுவதாக குறை கூறிய அவர், சதித்திட்டங்கள் மூலம் பாரதிய ஜனதா தலைவர்களை வழக்குகளில் சிக்க வைக்க காங்கிரஸ் முயற்சிப்பதாக குற்றம்சாட்டினார்.

சி.பி.ஐ.க்கு முழுமையான தன்னாட்சி வழங்குவதற்காக




அமைச்சர்கள் குழுவை அமைப்பது கண்துடைப்பு என்றும் அருண் ஜெட்லி விமர்சித்தார். இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள காங்கிரஸ், பாரதிய ஜனதாவுக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் அக்கட்சித் தலைவர்கள் இவ்வாறு கூறுவது வழக்கமாகி விட்டது எனக் குறை கூறியுள்ளது.



கடலில் நீண்ட தூரம் பாய்ந்து, இலக்கைத் தாக்கி அழிக்கும், அமெரிக்காவின், பி--81ரக விமானம், அரக்கோணத்தில் உள்ள, கடற்படைத்தளத்தில், அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த, 2009ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட, இந்திய - அமெரிக்க ஒப்பந்தத்தின் படி, இவ்வகை ரக விமானங்கள், தயாரிக்கப்படுகின்றன. இவ்வகை விமானங்கள், நீர் மூழ்கிக் கப்பலைக் கண்காணிக்கும் திறன் படைத்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழக அரசின் மிரட்டல்களை சட்டப்படி எதிர்கொள்வோம்

## என்கிறார் ராமதாஸ்



தமிழக அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து வழக்குத் தொடருவோம் என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மரக்காணம் சம்பவத்துக்கு, நீதி விசாரணை கேட்டு போராடச் சென்ற என்னைக் கைது செய்து, தமிழகஅரசு சிறையில் அடைத்தது என் கைதைப் பயன்படுத்திக் கொண்டு, விடுதலைச்சிறுத்தைகளும் சமூக விரோதிகளும் வன்முறைகளை நடத்தினர். பஸ் மீது கல்வீச்சு, பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது போன்ற செயல்களை, விடுதலைச் சிறுத்தைகள் தான் செய்தனர்.

என் கைதைத் தொடர்ந்து, அறவழியில் உணர்வுகளை வெளிப்படுத்துவோம்? என்று தான், பா.ம.க.இளைஞர் அணித் தலைவர் அன்புமணி தெரிவித்தார்.

வன்முறையைத் தூண்டும் வகையில், அவர் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. பா.ம.க.வினர் மீது, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை எதிர்த்து, வழக்குத் தொடருவோம்.

இதில், உண்மைகள் வெளிவரும் என பயந்தே, வன்முறைகளை, பா.ம.க.வினர் செய்தனர் என, முதல்வர் குற்றம் சாட்டுகிறார். பா.ம.க.வை தடை செய்யப் போவதாகவும் கூறியுள்ளார். அரசியல் கட்சியை தடை செய்யும் அதி காரம், மா நில அரசுக்கு இல்லை. தேர்தல் ஆணையத்துக்குத் தான் உள்ளது. எனவே, தமிழக அரசின் மிரட்டல்களை, பா.ம.க. சட்டப்படி எதிர்கொள்ளும் இவ்வாறு, ராமதாஸ் கூறினார்.

# இந்திய வரைபடத்தில் மிஸ்ஸானது அருணாச்சலம்

மகாராஷ்டிரா மாநில, 10ஆம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள, இந்திய வரைபடத்தில், அருணாச்சல பிரதேசம் இடம்பெறவில்லை. அதுமட்டுமின்றி, அம்மாநிலம், சீனாவுக்குச் சொந்தமானதாக காட்டப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநில கல்வி வாரியத்தின் சார்பில் அச்சிடப்பட்டுள்ள, 10 ஆம் வகுப்பு புவியியல் பாடப் புத்தகத்தில், உலக நாடுகள் மற்றும் இந்தியாவின் வரைபடங்கள் இடம்பெற்றுள்ளன.

புத்தகத்தில், அச்சிடப்பட்டுள்ள இந்திய வரை படத்தில், நாட்டின் வடகிழக்கு மாநிலமான, அருணாச்சல பிரதேசம் இடம் பெறவில்லை.

அதற்கு மாறாக, உலக வரைபடத்தில், அருணாச்சல பிரதேசம், சீன எல்லைக்குள் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே, அருணாச்சல பிரதேசம் தங்களுக்கு சொந்தமானது என, சீனா கூறி வரும் நிலையில், இந்த வரைபடம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி மாநில கல்வித்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்களோ, புத்தகங்களை அச்சிட்ட நிறுவனத்தின் மீது, பழியைப் போட்டு, தப்பித்துக் கொண்டனர். இதற்கிடையே, புத்தகங்களை அச்சிட்ட, அரசு அச்சகமான, பாலபாரதி, தன் தவறை ஒப்புக் கொண்டது. எனினும், 17 இலட்சம் புத்தகங்கள் அச்சிடப்பட்டு விட்டதால், இதில் மாற்றம் செய்ய முடியாது என்றும், இந்தப் புத்தகங்களே மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும், அடுத்த ஆண்டு, புத்தகங்களை அச்சிடும் போது, பிழையை திருத்திக் கொள்வதாகவும் கூறியுள்ளது. மாநில கல்வித் துறை மற்றும் அச்சகத்தின் பொறுப்பற்ற இந்தச் செயற்பாடு, மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், செய்த தவறை அடுத்த ஆண்டு திருத்திக் கொள்வதாக கூறியுள்ளதால், இந்த ஆண்டு, 17 இலட்சம் மாணவர்கள், அருணாச்சல பிரதேசம், சீனாவுடையது என்றே கல்வி கற்க உள்ளனர்.

# புற்றுநோயிலிருந்து முழுமையாக குணமடைந்த மனிஷா கொய்ராலா

(மும்பை)


பிரபல இந்தி நடிகை மனிஷா கொய்ராலா தமிழில் பம்பாய், பாபா, இந்தியன், முதல்வன் ஆகிய படங்களில் நடித்துள்ளார். 42 வயதான மனிஷாகொய்ராலா சமீபத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சை பெற்றார்.

பின்னர் தொடர் சிகிச்சைக்காக அவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மும்பையில் உள்ள ஜஸ்லோக் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சைக்குப் பின்னர் நடிகை மனிஷா கொய்ராலா தற்போது குணமடைந்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளமான பேஸ்புக் தனது பக்



கத்தில் மனிஷாகொய்ராலா கூறுகையில் அனைவரின் பிரார்த்தனையாலும் ஆசீர்வாதத்தாலும் எனது உடல் நிலை சீரடைந்து படிப்படியாக புற்றுநோயில் இருந்து நான் தற்போது முழுமையாக விடுபட்டு உள்ளேன். நான் விரைவில் உங்களை சந்திக்க வருவேன் என்று குறிப்பிட்டுள்ளார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பொருளாதார இயங்கு சக்தியாக ஆசியா மாற்றமடைய வேண்டும்

## அழைப்பு விடுக்கும் சீனப்பிரதமர்



உலக பொருளாதாரத்தை இயக்கும் இயந்திரமாக ஆசியா மாற வேண்டுமானால், இந்தியாவும், சீனாவும் கைகோர்க்க வேண்டும், என, சீன பிரதமர் ல் கெகியாங் தெரிவித்துள்ளார். சீன இளைஞர்கள், 500 பேர் சில மாதங்களுக்கு முன், இந்தியாவுக்கு நல்லெண்ண பயணம் மேற்கொண்டனர். இதேபோல தற்போது, இந்திய இளைஞர்கள், சீனாவுக்கு ஒன்பது நாள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

பீஜிங் நகரில் உள்ள, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில், அந்நாட்டு பிரதமர் லீ கெகியாங்கை, இந்திய இளைஞர்கள் நேற்று முன்தினம் சந்தித்தனர். அப்போது, பிரதமர் லீ கெகியாங் பேசியதாவது;

இந்தியாவுக்கு, 27 ஆண்டுகளுக்கு முன் பயணம் செய்த போது, தாஜ்மகால், டில்லி பல்கலைக்கழகம் உள்ளிட்டவற்றையெல்லாம் பார்த்தேன். எதிர்கால உலகத்தின் நம்பிக்கையாக ஆசியா உள்ளதாக மக்கள் கூறுகின்றனர். இந்த நம்பிக்கை கைக்கூட வேண்டுமென்றால், இரு நாட்டு இளைஞர்களுக்கிடையே பரிமாற்றம் இருக்க வேண்டும். சீனாவுக்கு அடுத்தபடியாக, அதிக சனத்தொகை கொண்ட நாடு இந்தியா. பண்டைய நாகரிகத்தில் இரு நாடுகளும் ஒற்றுமை உடையவை. இயற்கையில் இரு நாடுகளும் நட்புக்கொண்டவை. 21 ஆம் நூற்றாண்டில் ஆசிய பசிபிக் நாடுகள் தான், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றப் போகின்றன, என, மக்கள் நம்புகின்றனர். உலக பொருளாதாரத்தை இயக்கும் சக்தியாக ஆசியா மாற வேண்டுமானால், சீனாவும், இந்தியாவும் கை கோர்க்க வேண்டும். இரு நாட்டு இளைஞர்களின் பரஸ்பர பயணத்தின் மூலம் நட்பு விதை தூவப்பட்டுள்ளது. இவ்வாறு லீ கெகியாங் பேசினார்

# மருத்துவ உயிர்ப் பிரதியாக்கத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

மனிதக் கரு முட்டை ஒன்றை உயிர்ப் பிரதியாக்கம் மூலம் அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

இதுவரை பிரிட்டிஷ் ஆய்வாளர்கள்தான் டோலி என்ற செம்மறி ஆட்டுக்குட்டியை 1996 ஆம் ஆண்டில் உருவாக்கியிருந்தனர்.

அன்று முதல் அதே இனப் பெருக்க உயிர்ப் பிரதியாக்க வழிமுறைகளைப் பயன்படுத்தி மனித கலங்களை உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சித்து வந்தனர்.

மரபணுக்கூறுகள் (டி.என்.ஏ) அகற்றப்பட்ட ஒரு முட்டையினுள வயதுக்கு வந்த ஒருவரின் கலத்தில் உள்ள பதார்த்தங்களை மாற்றீடு செய்ததாக "ஒரே கொன்னை" சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

அதன் பின்னர் கருக்கட்டாத முட்டையைக் கருக்கட்டும் குருத்துக் கலங்களாக உருவாவதற்காக மின்சாரத்தின் உதவியுடன் தூண்டியதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தக் குருத்துக் கலங்கள் மனித உடலில் இருக்கக் கூடிய ஏனைய அனைத்து வகைக் கலங்களாகவும் மாற்றப்படக் கூடியவையாகும். இதயம், மூளை மற்றும் எலுமபுக் கலங்களாகவும் அவை மாற்றப்படலாம்.

சேதமடைந்த தசைகளை பழுதுபார்க்கவும், நோய்களைக் குணமாக்கவும் இந்தக் கலங்கள் பயன்படுத்தப்படலாம் என்று இந்தச் சோதனைகளுக்கு ஆதரவானவர்கள் கூறுகிறார்கள்.

# கின்னஸ் சாதனை படைக்க முதியவரின் புதியமுயற்சி



பொச்சுமட்டையுடன் கூடிய முழுத் தேங்காயை தனது உறுதியான பற்களால் எட்டே வினாடிகளில் உரித்து, 63 வயதிலும் சாதனை படைத்து வருகிறார், பனாமா நாட்டைச் சேர்ந்த ஆண்ட்ரெஸ் கார்டின்.

கடப்பாரை மற்றும் அரிவாளின் உதவியின்றி 6 மணி நேரத்திற்குள் 500 தேங்காய்களை என்னால் உரிக்கமுடியும். இந்தச் சாதனையின் மூலம் கின்னஸ் புத்தகத்தில் எனது பெயர் இடம்பெற வேண்டும் என்று கூறுகிறார் இவர்.

இவர் அசுர வேகத்தில் தேங்காய் மட்டைகளை பல் மற்றும் கை விரல்களினால் பிய்த்துத் தள்ளும் அழகை ஏராளமான இரசிகர்கள் தங்களது கமரா மற்றும் தொலைபேசிகளில் பிரமிப்புடன் படம்பிடித்து செல்கின்றனர்.

தனது தொழில் அனுபவத்தை விபரிக்கும் ஆண்ட்ரெஸ் கார்டின், பல்லினால் தேங்காய் உரிப்பது என்பது சாதாரணமான காரியமல்ல. இதற்குத் தாடையில் சக்தி வேண்டும். பற்களில் சக்தி வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளின் அனுக்கிரகமும் வேண்டும் என்கிறார்.

# ஒழுக்கத்தை மீறியதனால் தேவாலயத்திலிருந்து வெளியேறும் கர்தினால்

(வத்திக்கான்)


ஸ்கொட்லாந்து நாட்டின் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தின் கர்தினாலாகத் தொண்டாற்றி வந்தவர் கேத் ஓ பிரியன்.

தற்போது பணியில் இருக்கும் மதகுரு ஒருவரும், முன்னாள் மதகுருக்கள் மூவரும், கடந்த 1980 களில் இவரது நன்னடத்தை குறித்து குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதால், கடந்த பெப்ரவரி மாதம் இவர் தனது தலைமைப் பதவியை ர்ராஜினாமா செய்தார். மார்ச் மாதத்தில் அவர் தன்னுடைய நடத்தை, தேவாலயத்தின் தரத்தில் குறைந்து போனதாக ஒத்துக்கொண்டார்.

உலகச் செய்திகள்

பதவி விலகிய பின்னர், ஸ்கொட்லாந்து நாட்டின் தென்கிழக்கே உள்ள டன்பார் தேவாலய இல்லத்தில் சிறிது காலம் தங்கியிருக்க அவர் முடிவு செய்தார். அவரின் இந்த முடிவினை ஏற்றுக்கொண்ட வத்திக்கான் தனது தவறுகளுக்கு பிராயச்சித்தமாகவும், தன்னுடயை ஆன்மீக கோட்பாடுகளை புதுப்பித்துக் கொள்ளும் விதமாகவும், பிரார்த்தனைகளில் ஈடுபடுவதற்காகவும் அவர் தேவாலயத்தை விட்டுச் செல்வதாக அறிவித்துள்ளார்.

பாப்பரசரின் அனுமதியுடனேயே அவர் தேவாலயத்தை விட்டு வெளியேறுவதை நேற்று முன்தினம் வத்திக்கான் தலைமை



அலுவலகம் உறுதி செய்துள்ளது.

நடத்தை குறித்த குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்படுவதற்கு முன்னால், பிரிட்டிஷ் வானொலி நிலையத்துடன் நடந்த பேட்டி ஒன்றில், பிரம்மச்சாரியத்தை கடைப்பிடிப்பதில் பெரும்பான்மையான மதகுருக்கள் சிரமப்படுகின்றார்கள் என்றும், எனவே அவர்கள் விரும்பினால் திருமண வாழ்வில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கர்தினால் கேத் ஓ பிரியன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# லெனின் நினைவிடம் மறுசீரமைப்பு மக்கள் பார்வைக்கும் திறப்பு



மொஸ்கோவில் ரஷ்யத் தலைவர் லெனினின் உடல் வைக்கப்பட்டுள்ள நினைவிடம் இதுவரையில்லாத அளவுக்கு பெரிய அளவில் மிறுசீரமைக்கப்பட்டு மீண்டும் மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டுள்ளது. செஞ்சதுக்கத்தில் உள்ள கிரனைட் சமாதியின் அடித்தளத்தில் நீர் கசிந்தமையால் பாதிப்பு ஏற்பட்டது. தறபோது அடித்தளத்தில் கொங்கிறீட் கலவை செலுத்தப்பட்டு அது பலப்படுத்தப்பட்டுள்ளது. ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திய லெனின் 1924 இல் இறந்தார். அதன் பிறகு அவரின் உடல் பாடம் செய்யப்பட்டது. கடந்த 1930 ஆம் ஆண்டில் இருந்து அவரின் உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைககப்பட்டுள்ளது.

அதேநேரம் லெனினின் உடலை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளும் அதைப் புதைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் அங்கே அடிக்கடி எழுந்து வருகின்றன. அண்மையில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பாதிக்கும் மேற்பட்ட ரஷ்யர்கள் லெனினின் உடல் செஞ்சதுக்கத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.

# சிரிய உள்நாட்டுப் போரில் 80 ஆயிரம் மக்கள் உயிரிழப்பு

சிரியாவில் அதிபர் பஷீர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் சிலர் ஆயுதப் போராட்டங்களிலும் இறங்கியுள்ளனர். ஆயுதப் போராளிகளை வேட்டையாட பஷீர் அல் ஆசாத், இராணுவத்தை ஏவிவிட்டுள்ளார்.

சிரியாவில் வாழும் மக்கள் உயிர் பயத்தில் லெபனான், துருக்கி உள்ளிட்ட நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இவ்வகையில், சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், சிரியாவில் நிலவிவரும் சூழ்நிலை தொடர்பான விவாதமும், வாக்கெடுப்பும் நேற்று முன்தினம் ஐ.நா. சபையில் நடைபெற்றது.

வாக்கெடுப்புக்கு முன்னர் பேசிய ஐ.நா.சபை தலைவர் உக் ஜெரெமிக், "சிரியாவில் கலவரம் தொடங்கிய நாளிலிருந்து இதுவரை 80 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லபட்டவர்களில் அப்பாவி பொது மக்கள் தான் அதிகம் என நம்பப்படுகிறது என்றார்.

இந்த வாக்கெடுப்பில் ஐ.நா.வில் உறுப்பினர்களாக உள்ள 193 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். சிரியாவின் நிலவரத்தைக் கண்காணித்துவரும் மனித உரிமை அமைப்பு சுமார் 94 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது. ஆனால், உள்நாட்டு ஊடகங்களோ, 1 இலட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறிவருகிறது.

# கொக்க–கோலா இரகசியம் விற்கத்துடிக்கும் அமெரிக்கர்

புகழ்பெற்ற குளிர்பானமான கொக்க-கோலா உலகம் முழுவதும் விற்பனையில் சக்கைப் போடு போட்டுவருகிறது.

1943 ஆம் ஆண்டிலிருந்து ஒரேமாதிரி சுவையுடன் கொக்க-கோலா தயாரிக்கப்பட்டு வருகிற்து. இந்த தயாரிப்புக்கான இரகசிய குறிப்புகள் அமெரிக்காவின் அட்லாண்டா மாகாணத்தில் உள்ள டவுண்டவுன் நகரில் உள்ள பழங்கால பேழை ஒன்றில் வைககப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு வந்தது.

அமெரிக்காவில் பழங்கால பொருட்களை விலைக்கு வாங்கி விற்கும் கிளி.்.ப் க்ளுக் என்பவர் தற்போது கொக்க-கோலாவின் தயாரிப்பு இரகசியம் என்னிடம் உள்ளது என்று பேட்டியளித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் ஒரு எஸ்டேட்டில் உள்ள பழங்கால பொருட்களை நானும் என் மனைவி அர்லேனும் ஏலத்தில் எடுத்தோம் அந்தப் பொருட்களில் ஒரு மரப்பெட்டியும் இருந்தது. பெட்டிக்குள் இருந்த கடிதங்களில் கொக்க-கோலா தயாரிப்பதற்கு தேவைப்படும் மூலப்பொருட்கள், தயாரிக்கும் முறை தொடர்பான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

இந்தக் குறிப்பு எனக்கு கிடைததுள்ளது என கொக்க-கோலா நிறுவனத்திடம் நான் தெரிவித்தேன். 10 நாட்களுக்குள் என்னை தொடர்புகொள்வதாக அவர்கள் கூறினார்கள். ஆனால், சொன்ன வார்த்தையை அவர்கள் காப்பாற்றவில்லை.

எனவே, அந்தத் தயாரிப்பு இரகசியத்தை இணையத்தளம் மூலம் ஏலத்தில் விட முடிவு செயதுள்ளேன். ஆரம்ப விலையாக 50 இலட்சம் அமெரிக்க டொலர்களை முன்னர் அறிவித்தேன். இப்போது 1.5 கோடி டொலர்களாக உயர்த்திவிட்டேன் என்றார்.

# டிப்ளோமா தாரிகளுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினை யாழ். உயர் தொழில நுட்பக் கல்லூரியில் ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாதாரிகள், தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமாதாரிகள், உடற்கல்வி டிப்ளோமாதாரிகள், மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் தமது நியமனம் தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகளை தவிர்ந்த ஏனையோருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும் அதே வேளை, மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரி நியமனம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

மூப்பின் அடிப்படையிலும், தகைமையடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எனவே இதனை வேலைவாய்ப்பாக மட்டும் கொள்ளாது சமூக மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு கடமையுணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், மல்லாகம், மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தடடார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வடமராட்சிப் பிரதேசத்தின் வல்லை முதல் மந்திகை வரையான பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்,

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, விஞ ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின்தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புது வீதி, சோமசுந்தரம் அவனியூ, முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கச்சேரியடி, புங்கன் குளம், ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண டைமானாறு வீதிப் பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல் வெட்டி, நவிண்டில் ஆகிய இடங்களிலும்,

22.05.2013 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

# ஐரோப்பிய விஜயம் தோல்வி, பொதுபலசேனா கவலை

(கொழும்பு)

புலம்பெயர் தரப்பினருடனான எமது தொடர்புகளை புலம்பெயர் புலிகள் குழப்பிவிட்டமையால் எமது ஐரோப்பிய விஜயம் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக பொதுபலசேனா அறிவித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் இந்த நாட்டில் எந்தளவுக்கான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நாம் அறிவோம். இதனால் நாங்கள் நேரடியாக புலிகளுடன் தொடர்பில்லாத, பிரிவினைவாதத்துடன் தொடர்பில்லாத புலம்பெயர் குழுவொன்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்தோம். அந்தக் குழுவுடன் இணைந்து செயற்பட முடியுமாக இருந்தால், கிடைக்கும் நிதியுதவிகளை நேரடியாக மக்களுக்கு வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கு செல்ல முடியும்.

எனினும் துரதிஷ்டவசமாக புலிகள் புலம்பெயர் பிரதிநிதிகளுடனான வேலைத்திட்டத்தை எதிர்த்தனர். இதனால் அந்த முன்னெடுப்புகள் முடிவுக்குகொண்டு வரப்பட்டன எனவும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

## இணையத்தளம் அங்குரார்ப்பணம்

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ புதிய இணையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசிய மொழிகள மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உடபட பலர் கலந்துகொண்டிருந்தனர். அரச கரும மொழிகள் திணைக்களத்தின் பொறுப்புக்கள், கடமைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது. நாடடின் அபிவிருத்தி செயற்பாட்டிற்கு மும்மொழிக்கொள்கையின் அவசியத்தை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரபாகரனின் பங்கர் வீடு

## மேலும் ஒன்று கண்டுபிடிப்பு

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் மற்றுமொரு நிலத்துக்கு அடியிலான வீடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தினர் வசித்ததாகக் கருதப்படும் இந்த வீட்டைச் சூழ உள்ள பகுதிகளில் அண்மையிலேயே மீள்குடியமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (02)

## காணி சுவீகரி...

தேசியக் கூட்டமைப்பு 5 ஆயிரம் முறைப்பாடுகளுடன் கூட்டு வழக்கொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. வடக்கில் காணிகளை இழந்துள்ள மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணிகளை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

## புதுமெருகுடன்...

உதவி அரச அதிபர், யாழ். மேலதிக அரச அதிபர், வடமாகாண செயலாளர், ஆளுநரின் செயலாளர், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள், மாநகரசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது யாழ். முச்சக்கர வண்டி சங்கத்தினரினால் தூர அளவீட்டு கருவிகள் (மீற்றர்) பொருத்தப்பட்ட ஆட்டோ வண்டிகளுக்கான அடையாளச் சின்னங்களும் (ஸ்ரிக்கர்) பொருத்தப்பட்டன. இவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் ஸ்ரிக்கர்களை ஒட்டி ஆரம்பித்துவைத்தனர்.

மிகவும் பழமை வாய்ந்த யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த நகரின் மத்தியிலே அழகுற அமைந்த மணிக்கூட்டுக்கோபுரம் தற்போது யாழ். மாநகர சபையின் முயற்சியால் கண்கவர் வடிவில் அழகுபடுத்தப்பட்டுள்ளது. 8 இலட்சம் ரூபா செலவில் இப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் தெரிவித்தார். (இ)

## சொல்ஹெய்ம் மீது...

குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, சகவாழ்வு மன்றம் என்ற அமைப்பினால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனத்தலைவர் குமார் ரூபசிங்க, முன்னாள் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட 11பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப பிடத்தக்கது. நிதி உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் இதனால் ஏற்பட்ட நிதி நட்டத்திற்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் குமார் ரூபசிங்க தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கை நீதிமன்றில் குறித்த இராஜதந்திரிகளுக்கு அழைப்பாணை பிறப்பிக்கும் வகையில் விடுக்கப்பட்ட அறிவிப்பு நோர்வே அரசாங்கத்தை அதிருப்தி அடையச் செய்துள்ளது. குறித்த அதிகாரிகள் இராஜதந்திர வரப்பிரசாதம் உடையவர்கள் எனவும் அவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் தண்டனை அளிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடரப்பட்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாரியளவில் விரிசல் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக நோர்வே தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்தவிடயம் குறித்து நோர்வே தரப்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் வெளியாகவில்லை.

# தாதியர் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

உயிர்காக்கும் உத்தம சேவையினை வழங்கும் தாதியர் சேவையின் மகிமைபோற்ற தாதியத்தின் மாதாவாம் புளோரின்ஸ் நைற்ரிங் கேள் அம்மையாரின் பிறந்த தினமான மே 2 ஆம் திகதி உலக் தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ். தாதிய கல்லூரியில் தாதியர்தினம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் இத்தாதியர் தினம் சிறப்பாக இடம்பெற்றது. வைத்தியசாலை பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, மேலதிக் அரச அதிபர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

முன்னதாக மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தாதியர்களின் தாதிய சத்தியப் பிரமாணம் இடம்பெற்றது. வரவேற்புரையுடன் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

தாதிய கல்லூரி அதிபரின் உரையை அடுத்து கல்லூரியின் முன்னாள் அதிபரின் உரையும் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் விசேட உரைநிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சர்வதேச தாதிய தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (இ,பா)

## முல்லையில்...

ஒட்டுசுட்டான் வீதி, குமுழமுனை, குழாமுறிப்பு, சிலாவத்தை தியோநகர் ஆகிய ஐந்து இடங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக மாவடடச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே முள்ளியவ்ளைப் பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம் மக்களை குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அப்பகுதி மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டு குறித்த பகுதியில் தமிழ் மக்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டு அவர்களையும் அங்கு குடியேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வரும் நிலையில் மீண்டும் 50 ஏக்கர் நிலப்பரப்பில் குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (02)

## மீண்டும்...

அவர் சுகாதார அமைச்சினால் கொழும்பிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விசாரணைகள் முற்றுப்பெற்றதனை அடுத்து அவர் மீண்டும் சுகாதார அமைச்சின் பணிப்பை அடுத்து தமது கடமையை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதேவேளை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற உலக தாதியர் தின நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா;இ)

# மாணவி மீது பாலியல் பலாத்காரம் சேனைப்பிலவில் நேற்று ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

ஏழு வயது மாணவியை பாலீயல் வல்லுறவிற்கு உட்படுத்திய நபரை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்ததுடன் பெற்றோர்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனைப்பிலவு மாணவர்களே இவ்வாறு வகுப்புக்களைப் பகிஷ்கரித்துள்ளனர். அத்துடன் பொது மக்களும் கூடி, பாடசாலையைத் திறக்கவிடாமல் தடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் காலை 3 மணித்தியாலங்கள் நீடித்ததாகவும், போராட்டம் காரணமாகவும், மாணவர்களின் பகிஷ்கரிப்பு காரணமாகவும் பாடசாலை நேற்று செயற்படவில்லை.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பாலியல் வல்லுறவு சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதனையடுத்து மக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த செவ்வாயன்று பாடசாலை முடிந்து வீட்டுக்கு சென்றுக்கொண்டிருந்தவேளை, 7 வயது சிறுமியொருவரை இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்று காட்டுப்பாங்கான காணியொன்றில் பாழடைந்த கிணற்றருகில் வைத்து அவர் மீது பாலியல் குற்றம் புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாழடைந்த கிணற்றைச் சுத்தம் செய்வதற்காகச் சென்றவர்கள் பற்றைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது, மாலை நாலரை மணியளவில் சிறுமியின் முனகல் சத்தம் கேட்டுள்ளது.

சட்டையில் இரத்தம் தோய்ந்த நிலையிலும் வாயிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்த நிலையிலும், கீறல் காயங்களுடனும் கண்டு பிடிக்கப்பட்ட சிறுமி உடனடியாக நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## கிளி. அரச செயலகத்தில் விழிப்புணர்வு கருத்தமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனையில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைமசசினால் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை இடம் பெற்றது.

சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் பெண்கள் பணியக பணிப்பாளர் திருமதி ஆர்.ஏ.சுவநந்த கருத்துரைகளை வழங்கினார். விரிவுரைகளை சட்டவாளர் விஜயராஜ் வழங்கினார். (28)

## தேசிய மட்ட போட்டியில் வடக்கு வீரர்கள் சாதனை

(வவுனியா)

தேசிய மட்ட கனிஷ்ட விளையாட்டு விழாவில் வடக்கின் வீரர்கள் பலர் முதன்மை இடங்களைப் பெற்றுள்ளனர். கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இந்த விழா நேற்று இடம்பெற்றது.

18 வயதின் கீழ் பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி சி.தர்சிகா முதலாம் இடத்தையும், 20 வயதின் கீழ் பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் கி.கோகுலவாணி 2 ஆம் இடத்தையும், 16 வயது பெண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் வவுனியா பூம்புகார் மகா வித்தியாலய் மாணவி கனகேஸ்வரி முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

18 வயது பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் தெல்லி. மகாஜனா மாணவி அனித்தா முதலாம் இடத்தையும், அளவெட்டி அருணோதயா மாணவி ஜென்சிகா 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (93)

## பாகிஸ்தானின் உதவித் திட்டம் கிழக்கிற்கு எட்டுமா?

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்திற்கும் பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகருக்குமிடையில் நேற்று இராஜதந்திர சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை முதலமைச்சர் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமருக்காக வாழ்த்து செய்தியினையும் பாகிஸ்தான் தூதுவர் ஹசன் சூர்சியிடம் முதமைச்சர் கையளித்துள்ளார்.

கிழக்கிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும், தொடர்ந்தும் இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லியை வீழ்த்தியது பஞ்சாப்



(பஞ்சாப்)

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 67 ஆவது லீக் போட்டி, பஞ்சாபில் நடைபெற்றது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் - டெல்லி டேர் டெவில்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற டெல்லி அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

பஞ்சாப் அணியின் தொடக்க வீரர்களாக கில்கிறிஸ்ட் மற்றும் மார்ஷ் களமிறங்கினர். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

கில்கிறிஸ்ட் 42 ஓட்டங்களுடனும், மார்ஷ் 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த மஹ்முத் 9 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் மில்லரும் சதிசும் ஜோடி சேர்ந்து விளையாடினார்கள். மில்லர் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 3 பவுண்டரி, 4 சிக்ஸர்கள் அடங்கும்.

இறுதியில் பஞ்சாப் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்கள் எடுத்தது.

டெல்லி அணியின் சார்பில் நெஹ்ரா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

172 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களாக ஜெயவர்த்தன மற்றும் சந்த் களமிறங்கினர். சந்த் 7 ஓட்டங்களுடன் வெளியேற, அடுத்து வந்த பதான் (1), வோர்னர் (0) என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 5 ஆவது வீரராக் களமிறங்கிய சேவாக் 30 ஓட்டங்கள் எடுத்த போது, அவானா வீசிய பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்தார். பின்னர் ஜெயவர்த்தன 39, ரொஹரர் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் டெல்லி அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது.

இதனால் பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தியது.

## பகிஷ்கரிப்பில் குதித்தால் பாதை அனுமதி இரத்து

பணிப்பகிஷ்கரிப்பில் குதித்தால் பாதை அனுமதி இரத்துச் செய்யப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க பஸ் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற சொகுசு பேருந்து உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு பேச்சுவார்தை ஒன்றின்போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்வாறன நடவடிக்கைகள் காரணமாக பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில், எதிர்வரும் 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் பாரிய பணிநிறுத்த போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக, முன்னதாக அறிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றி விழா ஒத்திகை



(கொழும்பு)

கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவிய யுத்தம், இராணுவத்தினரால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியடையவுள்ளன.

இந்நிலையில், யுத்த வெற்றிக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் கொழும்பில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை கொழும்பில் இடம்பெறவுள்ள இந்த யுத்த வெற்றி நிகழ்விற்காக கொழும்பு காலி முகத்திடலில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## வெடிபொருட்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவிஸ் கிராமம் பாலமீன் மடுவில் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினரால் ஒரு தொகை வெடிபொருட்கள் நேற்று மாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைக்குண்டுகள் 45, மிதி வெடிகள் 10 என்பவையே இவ்வாறு மீட்க்கப்பட்டுள்ளன.

புலனாய்வுப பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இவை அனைத்தும் பாழடைந்த வீடொன்றின் சமையலறையின் புகைக்கூட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் காலத்தில் நாசகார வேலைகளுக்காக பயன்படுத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இவைகள் அனைத்தும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் மட்டக்களப்பு பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஆடம்பர கார் இறக்குமதி

(கொழும்பு)

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்புதற்காக சமுகமளிக்கவுள்ள நாடுகளின் தலைவர்களின் பயன்பாட்டிற்காக 112 ஆடம்பர கார்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

12 றோல்ஸ்றொய்ஸ் மற்றும் பி.எம்.டபிள்யூ ரக கார்கள் 100 என மொத்தமாக 112 ஆடம்பர கார்களை கொள்வனவு செய்வதற்கே வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கார்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மீளவும் ஏற்றுமதிசெய்யப்படுமா என்பது தொடரபில் எவ்விதமான தகவல்களும் வெளியாகவில்லை.றோல்ஸ்றொய்ஸ் கார் 3.1 கோடி ரூபாவிலிருந்து 3.7 கோடி ரூபா வரையும் உள்ளது.

றோல்ஸ்றொய்ஸ் பன்ரம் கார் 5.1 கோடி ரூபாவிலிருந்து 6 கோடி ரூபா வரையிலும் உள்ளது. பி.எம்.டபிள்யூ கார்கள் 75 இலட்சத்திலிருந்து 1 கோடியே 80 இலட்சம் ரூபா வரையிலும் உள்ளது. இந்த விலைகளில் சுங்கவரி மற்றும் கப்பல் செலவு என்பன உள்ளடங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

NALIN IT
195/2, Palaly road, Parameswara Junction, Palaly Road, Jaffna.
MEGA OFFER
HP 1000 - 1311 TU — Dual core - 2.4GHZ, 2GB Ram, 500GB HDD, 14.0'LED, Dos. — RS. 54,500
HP Pavilion g6 - 2230 TU — i3-3110 - 2.4GHZ, 4GB Ram, 500GB HDD, 15.6'LED, Dos. — RS. 65,500
HP 2000 - 2302 TU — i5-3230 - 2.6GHZ, 2GB Ram, 500GB HDD, 15.6'LED, Dos. — RS. 75,500
HP Probook 4540 S — i3-3110, 4GB Ram, 500GB HDD, 15.6'LED, Win-8 Original — RS. 81,500
DELL Insprion 3521 — i3 - 3227 - 4GB Ram, 500GB HDD, 15.6'LED, Win-8 Original — RS. 72,000
DELL Insprion BTX 5520 — i7 - 3632QM - 4GB Ram, 750GB HDD, 15.6'LED, Dos — RS. 105,000
HeadPhone, Mouse, Bag FREE
Special Price For Dongle, Pendrive, External HDD.
AUTHORIZED BUSINESS PARTNER
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD
TP:0212221121/1166 | 0777667975 facebook.com/nalin it
(C/2753)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.